# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1919/81 - 2015 ජුනි මස 19 වැනි සිකුරාදා - 2015.06.19

1919/81 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

கடுகண்ணாவ நகர சபை

**துணைவிதிகள்**

(255 ஆவது அத்தியாயமான ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் 10 (எ) உப பிரிவின் கீழ் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கடுகண்ணாவ நகர சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த நகர சபைகள் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2014, செத்தெம்பர் 15.

கட்டாக்காலியாகத் திரியும் விலங்குகளைப் பிடித்துக் கொள்வது பற்றிய துணை விதிகள்

1. இந்த துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் கட்டாக்காலியாகத் திரியும் விலங்குகளால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்வதும், குறித்த விலங்குகளைப் பிடித்துக்கொள்வது மற்றும் உரிய பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகளைச் செய்வதும் பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. தலைவரால் குறித்துரைத்து அதிகாரமளிக்கப்பட்டவர் கடுகண்ணாவ நகர சபை நிர்வாக எல்லைக்குள் பொது இடங்களில் கட்டாக்காலியாகத் திரியும் விலங்குகளைப் பிடிப்பதும், தமது பொறுப்பில் வைத்துக்கொள்ளலும் வேண்டும்.

3. இரண்டாவது துணைவிதியின் கீழ் பிடிக்கப்படும் விலங்குகளைக் காப்பாளர் ஒருவரது பொறுப்பில் கொண்டு, இயன்ற அளவு விரைவாகப் நகர சபை அமைத்து நடத்தி வரும் விலங்குக் கொட்டிலுக்குக் கொண்டு செல்லல் வேண்டும்.

4. எவரேனும் ஒருவர் மேற்குறித்த இரண்டாவது துணைவிதிக்கு அமைய அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் கடமையாற்றும் போது அதற்குத் தடையாக இருப்பதும், அல்லது பொருத்தமற்றது எனத் தலையீடு செய்வதும் கூடாது.

5. இந்தத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பாளரினால் கொட்டிலுக்கு ஒப்படைக்கப்படும் விலங்குகள் பற்றிய பதிவேடொன்றைப் பேணி வருதல் வேண்டும். அது துணையேடு - 01 என அழைக்கப்படுதல் வேண்டும்.

6. கொட்டிலில் அடைக்கப்படும் விலங்குகளுக்கு ஏற்படும் சேதங்களையிட்டுச் சபை பொறுப்பு ஏற்காது.

7. கொட்டிலில் அடைக்கப்பட்ட விலங்கொன்றை விடுவிப்பதற்கென, அந்த விலங்கைப் பிடிக்க மேற்கொண்ட செலவுகள், பாதுகாப்புக் கட்டணம், நோய்ப் பரிகாரம் இருந்தால் அதற்கான கட்டணம் என்பவற்றைக் கணக்கிட்டு நகர சபை விதிக்கும் தொகையொன்றை விலங்கின் உரிமையாளர் அல்லது பாதுகாவலர் நகர சபையிடம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெறுதல் வேண்டும்.

8. தலைவர் அல்லது தலைவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலர் மூலம் வழங்கப்படும் விலங்குகளை விடுவிக்கும் கட்டளைப்படிவம் இல்லாத எந்த விலங்கையும் விடுவித்தல் கூடாது. விடுவிக்கும் கட்டளைப் படிவத்தில் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பவரிடமே விலங்குகளைக் கையளித்தல் வேண்டும்.

9. உரிமையாளர் அல்லது பாதுகாவலர் முன்வராத, உரிய கட்டணங்கள் செலுத்தப்படாத விலங்குகள் பிடிக்கப்பட்ட 10 நாட்களுக்கு குறையாத நாட்களுக்கு கொட்டிலிலிடப்பட்டிருக்கும் விலங்குகளின் உரிமை சபைக்கு உரியதாகும். அத்துடன், சபைக்கு ஏற்பட்ட செலவுகளை ஈடுசெய்வதற்கெனச் சபை தீர்மானிக்கும் வகையில் அவை ஏலத்தில் விற்கப்படுதல் வேண்டும்.

10. 9 ஆவது துணை விதியின் கீழ் விலங்குகளைச் சபை இறைச்சிக்காக ஏலத்தில் விற்பனை செய்தல் கூடாது.

11. ஏலத்தில் விற்கப்பட்டு பெறப்படும் பணத்திலிருந்து நகர சபைக்குச் சேரவேண்டிய செலவுகளைப் பெற்றுக்கொண்ட பின் எஞ்சியிருப்பின், அத்தொகையை உரிமையாளர் அல்லது பாதுகாவலர் கேட்டுக்கொள்ளப்படும் பட்சத்தில் அவரிடம் அத்தொகை ஒப்படைக்கப்படுதல் வேண்டும். ஏலவிற்பனை செய்யப்பட்ட 6 மாதங்களின் பின் செய்யப்படும் அவ்வாறான வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அத்தொகை சபையின் பொது நிதியில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

12. இந்தத் துணை விதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்சத் தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 (2) ஆவது பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் உட்படுத்தல் வேண்டும்.

13. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற்பதங்களின் விளக்கம் :

“சபை” என்பது, கடுகண்ணாவ நகர சபையையும் ;

“தலைவர்” என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரையும் ;

''அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்'' என்பது, நகர சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும் குறிப்பிடும்.

14. இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

**அட்டவணை - 01**

| திகதி | விலங்குகளின் விபரம் (வகை/நிறம்) | விலங்குகளின் தொகை | கையளித்த அலுவலரின் கையொப்பம் | கையேற்றவர் கையொப்பம் |
|---|---|---|---|---|
| | | | | |

7- 279/1

---

**மத்திய மாகாண மாகாண சபை**

கடுகண்ணாவ நகர சபை

**துணைவிதிகள்**

(255 ஆவது அத்தியாயமான ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் (3) உப பிரிவின் கீழ் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கடுகண்ணாவ நகர சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2014, செத்தெம்பர் 15.

வரி அறவிடுவது சம்பந்தமான தகவல்களைப் பெற்றுக்கொள்வது பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் எல்லா வர்த்தக நிலையங்கள் மற்றும் கைத்தொழில்கள் சம்பந்தமாக வரி அறவிடுவதற்குரிய தகவல்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பான துணை விதிகள் என அழைக்கப்படும்.

2. இந்தத் துணை விதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் எல்லா வர்த்தக நிலையங்கள் மற்றும் கைத்தொழில்கள் சம்பந்தமாக வரி அறவிடும் கருமங்களுக்கெனத் தேவைப்படும் கணக்கு அறிக்கைகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளத் தேவையான தவணை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதை முறைப்படுத்துவதற்கென விதிக்கப்படுகின்றன.

3. கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள எல்லா வர்த்தக, வியாபார, இயக்கங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு முறைகளுக்கமையத் தெளிவான கணக்கு அறிக்கைகளைப் பேணிவருதல் வேண்டும்.

4. தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் மூலம் வேண்டப்படும் அனைத்து நிதி மற்றும் கணக்குகளுக்குரிய தகவல்களை வழங்குதல், பிரதிகளை வழங்குதல் என்பன வர்த்தக வரிக்கு உட்படும் ஒருவரது கடமையாக அமையும்.

5. தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களால் காலத்துக்குக் காலம் வேண்டப்படும் அனைத்து வர்த்தகத் தகவல்கள் மற்றும் நிதி, கணக்குகள் பற்றிய அறிக்கைகள் என்பவை கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கு அமையத் தயாரிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

6. மேற்குறித்த 5 ஆவது துணை விதியின் கீழ் முன்வைக்கப்படும் அனைத்து நிதித் தகவல்களும் கணக்கறிக்கைகளும் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரால் பரிசீலிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

7. கடுகண்ணாவ நகர சபையின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் விடுக்கப்படும் அறிவித்தல் கிடைத்த எவரேனும், குறித்த அறிவித்தல் தமக்குக் கிடைத்த 14 நாட்களுக்குள் அதில் வேண்டப்பட்டுள்ள தகவல்களைச் செயலாளரிடம் முன்வைத்தல் வேண்டும்.

8. பிழையான தகவல்களை வழங்குவதோ அல்லது தகவல்களை வெளியிடாது இருத்தலோ குற்றமாகக் கருதப்படும்.

9. மேற்குறித்த 5 ஆம் துணை விதியின் கீழ் கேட்கப்படும் தவணை அறிக்கைகளுக்கமையத் தகவல்களைப் பரிசீலிப்பதற்குத் தேவைப்படின், உரிய வர்த்தக நிலையம், தொழிற்சாலையின் வளவுக்குள் வந்து தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் குறித்த ஏடுகளின் மெய்த்தன்மையைப் பரிசீலிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.

10. இந்தத் துணை விதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்சத் தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அத்தியாயம்) 153 (2) ஆவது பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

11. 10 ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்படும் தண்டத்தொகை நகர சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

12. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற்பதங்களின் விளக்கம் :-

"சபை" என்பது, கடுகண்ணாவ நகர சபையையும் ;

"தலைவர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரையும் ;

"செயலாளர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் செயலாளரையும் ;

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது கடுகண்ணாவ நகர சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும் குறிப்பிடும்.

13. இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏதும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

7 - 279/2

**மத்திய மாகாண மாகாண சபை**

கடுகண்ணாவ நகர சபை

**துணைவிதிகள்**

(255 ஆவது அத்தியாயமான ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் 9 (ப) உப பிரிவின் கீழ் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கடுகண்ணாவ நகர சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2014, செத்தெம்பர் 15.

நடைபாதையை நெருக்கடிக்கு உள்ளாக்குவதைத் தவிர்ப்பதற்கான துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் நடைபாதைகளை நெருக்கடியாக்குவதைத் தவிர்ப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உள்ள துணை விதிகள் என அழைக்கப்படும்.

2. எந்த ஒருவரும் எந்த வகையிலும் நடைபாதையில் எந்தவொரு பொருளையும் விற்பனை செய்வது, வர்த்தகம் செய்வது, சேர்த்து வைப்பது அல்லது காட்சிப்படுத்துவதைச் செய்தல் கூடாது.

3. எந்தவொரு நடைபாதையிலும் எவரும் எந்தவொரு வாகனத்தையும் செலுத்துவதோ அல்லது நிறுத்தி வைப்பதோ கூடாது.

4. நடைபாதைக்கு இடைஞ்சல் ஏற்படும் விதத்தில் அதில் உட்கார்ந்திருக்கும் அல்லது அதனைப் பாவித்தல் கூடாது.

5. தலைவரது எழுத்துமூல அனுமதியின்றி எவரும் நடைபாதையின் அருகிலுள்ள கட்டடமொன்றில் திருத்தவேலை செய்வதோ அல்லது அதனைச் செய்வதற்காகத் தற்காலிக ஏணிமேடை அமைப்பதோ அல்லது கட்டடத்தின் கூரையின் ஒரு பகுதியை அல்லது பெயர்ப்பலகையின் ஒரு பகுதியை நடைபாதையின் பக்கத்துக்கு நீட்டிவிடும் வண்ணம் அமைப்பதோ அல்லது செய்வதோ, பொருத்துவதோ செய்தல் கூடாது.

6. நடைபாதையில் நெருக்கடி ஏற்படும் விதத்தில் எவரேனும் நடைபாதையில் கல், செங்கல், மணல், அரிமரம் அல்லது வேறு ஏதும் பொருட்களை விற்பனை செய்வதோ அல்லது வேறேதும் வழிகளில் பயன்படுத்துவதற்கெனச் சேகரிப்பதோ அல்லது வைத்திருத்தலோ கூடாது.

7. இந்தத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய தலைவரால் வழங்கப்படும் எழுத்துமூல அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதும் நிர்மாணங்கள், திருத்தவேலைகள் மேற்கொள்ளும்போது ஏற்படும் இடிந்து விழுகைகள் அல்லது அதற்கெனப் பயன்படுத்தப்படும் பொருட்களோ உபகரணங்களோ நடைபாதையில் விழுவதன் மூலம் எவரேனும் பாதசாரிக்கு ஏற்படும் நட்டம் அல்லது உடல் உபாதைகளுக்கான நட்டஈட்டைப் பெறுவதற்குரிய அவருக்கான உரிமையைப் பாதிக்கச் செய்தல் கூடாது. நட்டஈடு வழங்குவதில் அனுமதிப்பத்திரதாரி வகை கூறுதல் வேண்டும்.

8. தமது கட்டடத்திலிருந்து வெளிவிடப்படும் அசுத்த நீரையோ அல்லது மழைநீரையோ நடைபாதையில் பிரவாகித்து ஓடச்செய்தல் கூடாது.

9. பதின்மூன்றாவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் மூன்றாவது மற்றும் ஆறாவது துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைபாதையை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் நிறுத்தப்பட்டுள்ள வாகனத்தை அல்லது ஏதும் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காகத் தலைவரால் எழுத்துமூல அல்லது வாய்மொழிமூல அறிவித்தல் வழங்கப்பட்ட காலத்துக்குள் மற்றும் அதன்படி செயற்பட வாகன ஓட்டுநர், உரிமையாளர் அல்லது ஏதும் பொருட்களின் சொந்தக்காரர்கள் தவறும் பட்சத்தில், அந்த வாகனத்தையோ அல்லது பொருட்களையோ குறித்துரைக்கப்படும் இடத்துக்குக் கொண்டு சென்று தரிக்கச் செய்ய அல்லது களஞ்சிப்படுத்த தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

10. ஒன்பதாவது துணைவிதியின்படி செயற்படும்போது ஏற்படும் ஏதேனும் நட்டங்களுக்கு நட்டஈடு கேட்பதற்கோ அல்லது நட்டஈடு பெறுவதற்கோ எவருக்கும் உரிமை இருத்தல் கூடாது.

11. ஒன்பதாவது துணைவிதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயன்முறைகளைக் கடைப்பிடிக்காதிருக்கையில், அவ்வாறான வாகனத்தினால் அல்லது பொருட்களினால் நட்டங்கள் அல்லது உடல் உபாதைகள் ஏற்பட்டால், அதற்கான நட்டஈட்டை வாகன உரிமையாளர் அல்லது பொருட்களின் சொந்தக்காரர்கள் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், எவ்வித நட்டஈட்டு வழங்கல்களுக்கும் தலைவர் உட்படமாட்டார்.

12. நடைபாதையை வேறாக்கிக் காட்டுவதற்கெனவும், அதன் எல்லைகளைக் காட்டுவதற்கெனவும் இடப்பட்டுள்ள கைகோர்ப்புக்கள், வேலிக் கம்பங்கள் என்பவற்றுக்குச் சேதம் விளைவித்தல் அல்லது அவ்வாறு செய்வித்தல், அதனை முறைகேடாகப் பயன்படுத்துதல் மற்றும் அதன்மீது அமர்ந்திருத்தல் என்பன செய்தல் கூடாது.

13. பாதசாரிகளுக்கு இடைஞ்சல் ஏற்படாத விதத்தில் சபை அவற்றை முறையாகப் பராமரிப்புச் செய்தல் வேண்டும்.

14. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அத்தியாயம்) 153 (2) ஆவது பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

15. 14 ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்படும் தண்டத்தொகை நகர சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

16. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற் பதங்களின் விளக்கம் :-

"நகர சபை" என்பது, கடுகண்ணாவ நகர சபையையும் ;

"தலைவர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரையும் ;

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும் ;

"மோட்டார் வாகனம்" என்பது, மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களையும் குறிக்கும்.

17. இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே ஏதும் கருத்து மயக்கம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

7 - 279/3

**மத்திய மாகாண மாகாண சபை**

கடுகண்ணாவ நகர சபை

**துணைவிதிகள்**

*(255 ஆவது அத்தியாயமான ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் 7 (ஊ) உப பிரிவின் கீழ் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கடுகண்ணாவ நகர சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

*மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,*
*கண்டி,*
*2014, செத்தெம்பர் 15.*

அறிவித்தல் பலகைகள் தொடர்பான துணைவிதிகள்

*1. இந்தத் துணை விதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் ஏதேனும் ஒரு பாதைக்குத் தென்படும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல்களை முறைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல், அவ்வாறு பிரசாரம் செய்யும் விளம்பர அறிவித்தல்களுக்கெனக் கட்டணங்களை அறவிடுதல் என்பன பற்றிய துணைவிதிகள் எனப்படும்.*

*2. .இந்தத் துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் விளம்பர அறிவித்தல்களை முறைப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் மற்றும் கட்டணம் அறவிடுதல் பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.*

*3. எந்தவொரு பாதையிலும் தென்படும் வண்ணம் எந்தவித விளம்பர அறிவித்தலையும் கடுகண்ணாவ நகர சபையின் தலைவரால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்துடனன்றி எவரும் காட்சிப்படுத்துதல் அல்லது காட்சிப்பட வைத்தல் கூடாது.*

*4. விளம்பர அறிவித்தல் எனப்படுவது பிரதான வீதியில், சிறிய பாதையில், மாகாண சபை பிரதேச சபை அல்லது தனிப்பட்ட பாதையில் தென்படும் வண்ணம் பலகைகள், பதாதைகள், கட்அவுட்கள், அலுமினியத் தகடுகள், உருக்குத் தகடுகள், பொலித்தீன், துணி, கடதாசி போன்ற தகடு, துணி அல்லது கடதாசிகளில் வரைந்து அல்லது கல்வனைசு இரும்பு போன்றவற்றினால் தயாரிக்கப்பட்ட அறிவித்தல் பலகையை வீடு, கடை, ஹோட்டல், சுவர், மதில் போன்றவற்றின் மீது எழுத்துக்களால் தமது வர்த்தக நிலையம், வியாபாரப் பொருள், வர்த்தகக் கண்காட்சி, களியாட்டம் போன்ற விழாக்களில் பயன்படுத்தும் விசேட அறிவித்தல்களும் அடங்கும்.*

*5. எவ்வகையான விளம்பரத்தையும் காட்சிப்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை இங்கு அட்டவணையில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்துக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை ஐந்தாவது துணைவிதிக்கமைய உரிய விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்த உத்தேசித்துள்ள திகதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் சபையின் தலைவரிடம் முன்வைத்தல் வேண்டும்.*

*6. நான்காவது துணைவிதியின் கீழ் முன்வைக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பப்படிவமும் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*(அ) செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் ;*

(ஆ) விளம்பரத்தைக் காட்சிப்படுத்த உத்தேசித்துள்ள ஆக்கத்தின் அளவுக்குச் சமமான அளவுத் திட்டத்தில் வரையப்பட்ட நில வரைபடம் ;

(இ) 1:1,000 அளவுத்திட்டத்தில் வரையப்பட்ட குறித்த ஆக்கத்தின் உரு ;

(ஈ) குறித்த திட்டத்தில், உருவில் அல்லது மாதிரியுருவில் இந்தத் துணைவிதிகளுக்கமைய மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் ஏதும் இருப்பின், அவை ;

(உ) காட்சிப்படுத்தப்படும் விளம்பர அறிவித்தலில் பயன்படுத்தப்பட்ட நிறங்கள் அனைத்தையும் கொண்டு சிறிய அளவில் வரையப்பட்ட விளம்பரத்தின் மாதிரி ;

(ஊ) அடுத்துள்ள வீதிகள் மற்றும் சாதாரண தரை அடையாளங்கள் என்பவற்றுடன் விளம்பரத்தின் அமைவிடத்தைக் காட்டும் திட்ட வரைபடம் ;

(எ) சபையின் தீர்மானமொன்றின் மூலம் நிறைவேற்றப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டணம் ;

(ஏ) குறித்த விளம்பரத்தை காட்சிப்படுத்தும் அங்கீகாரத்தை வழங்குவதற்கெனப் பிரதேச சபைக்குத் தேவைப்படும் ஏனைய தகவல்கள்.

7. கடுகண்ணாவ நகர சபைத் தலைவரால் எழுத்துமூலம் அனுமதி வழங்கப்பட்ட வரைபடத் திட்டங்களுக்கும் வரைபுகளுக்கும், முன்வரைபுகளுக்கும் அமைய நிர்மாணிக்கப்பட்ட விளம்பர அறிவித்தல்களைத் தவிர எவரேனும் பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் ஏதும் விளம்பர அறிவித்தலை அல்லது அறிவித்தல்களைக் காட்சிப்படுத்தும் எந்தவொரு பலகையையோ, அறிவித்தல் பலகையையோ அல்லது வேறேதும் ஆக்கங்களையோ நிர்மாணித்தல் அல்லது நிர்மாணிக்கச் செய்தல் கூடாது.

8. 4 ஆவது துணைவிதியின் கீழ் முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவம் நகர சபையின் தலைவரால் அங்கீகரிக்கப்படும் தருணத்தில், குறித்த வருடத்தில் கட்டணம் அறவிடுவது தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட குறித்த கட்டணத்தைச் செலுத்தும் வரை விண்ணப்பதாரிக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படக்கூடாது. அந்த வர்த்தகரது இடத்தின் பெயர்ப்பலகை, அதன் பருமன் என்பவற்றை நகர சபை தீர்மானிக்கும்.

9. விளம்பர அறிவித்தல் ஒன்றைக் காட்சிப்படுத்துவதற்கென எவரேனும் ஒருவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அவரால் காட்சிப்படுத்தப்படும் ஒவ்வொரு அறிவித்தலிலும் அனுமதிப்பத்திரத்தின் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டுமெனப் பிரதேச சபை அவர்களைக் கேட்டுக்கொள்ளல் வேண்டும்.

10. இந்தத் துணைவிதிகளின் ஏற்பாடுகள் பின்வரும் விளம்பரங்கள் எதற்கும். அவை மின்னொளி பாய்ச்சும் விளம்பர அறிவித்தல் அல்லது வான்வழி பெயர்ப்பலகையாக இருந்தாலொழிய பொருந்தாது ;

(அ) பெறப்படும் தேறிய அளவு புண்ணிய கருமங்களில் ஈடுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சிகளுடன் தொடர்புள்ள விளம்பர அறிவித்தல்கள் ;

(ஆ) ஏதுமொரு நிகழ்ச்சியை நடத்துமிடத்தல், குறித்த நிகழ்ச்சியைப் பிரசித்தப்படுத்தும் விளம்பர அறிவித்தல்கள் ;

(இ) சமய, அரசியல் பொதுக்கூட்டங்கள் தொடர்பான விளம்பர அறிவித்தல்கள் ;

(ஈ) ‘‘வாடகைக்கு உண்டு’’ எனக் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல்கள் ;

(உ) ‘‘விற்பனைக்கு உண்டு’’ எனக் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல்கள் ;

(ஊ) வீட்டுப் பெயர்ப்பலகை (அதன் அளவைச் சபை தீர்மானிக்கும்) ;

(எ) தொழில்சார் நடவடிக்கைகளில் பயன்படுத்தும் 0.93 சதுர மீற்றரைத் தாண்டாத பெயர்ப்பலகைகள் ;

(ஏ) வியாபாரம் அல்லது வர்த்தக நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் வாகனத்தில் குறித்த வர்த்தகம் அல்லது வியாபாரம் தொடர்பாக அதன் தன்மையையும் உரிமையாளரது பெயர், முகவரி, தொலைபேசி அல்லது டெலெக்ஸ் இலக்கம் என்பவற்றைக் காட்டும் விளம்பர அறிவித்தல்கள்.

11. எவரேனும் ஒருவர் -

I. ஒரு வீதியில், தெருவில் அல்லது நடைபாதையில், வாகன வழியின் மேல் அல்லது குறுக்காக நீட்டிக்கொண்டிருக்கும் வண்ணம் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துதல் ;

II. தரையிலிருந்து 15 மீற்றரைத் தாண்டும் உயரத்தில் ஏதும் பலகைகளில் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துதல் ;

III. ஏதேனுமொரு வீதியை அல்லது பாதையை எதிர்நோக்குமாறு அமைந்துள்ள கட்டடத்தின் முகப்பில் வர்த்தக நிலையத்தின் பெயர்ப்பலகை அல்லது கட்டடத்தின் முற்பக்க எல்லையைத் தாண்டிச் செல்லும் நீளத்தில் விளம்பர அறிவித்தலைப் பொருத்துதல் அல்லது தொங்கவிடுதல் ;

IV. வான்வழி விளம்பரங்களைப் போன்ற விளம்பர அறிவித்தலைக் கடுகண்ணாவ நகர சபையின் முன் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது எவ்வகையிலேனும் அமைத்தல், செய்தல் என்பன கூடாது.

12. எவரேனும் ஒருவர் தனிப்பட்ட அல்லது பொதுக் கட்டடமொன்றில், பொதுப் புண்ணியத்தலத்தில், பொது விளையாட்டு மைதானத்தில், பொதுப் பூங்காவில் அல்லது பாலமொன்றில் அல்லது பாதையிலுள்ள வழிப் பாலமொன்றில், தொலைபேசி மின்சாரக் கம்பத்தில், தடுப்புச் சுவரில் அணைக்கட்டில், மலைக் குன்றில், கரையில் அல்லது மரத்தில் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துதல் கூடாது.

13. இந்தச் சபை தீர்மானம் ஒன்றின் மூலம் நிறைவேற்றிக் குறித்துக் காட்டப்பட்டதும், வர்த்தமானியில் உரிய முறையில் பிரசுரிக்கப்பட்டதுமான பிரதேசமொன்றில் ஏதும் விளம்பர அறிவித்தலை, அது கடுகண்ணாவ நகர சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் அமைந்தாலொழிய அல்லது அமைக்கப்பட்டிருந்தாலொழிய, காட்சிப்படுத்துதல் கூடாது.

14. கடுகண்ணாவ நகர சபையின் பிரதேசத்துக்குள் எந்த வீதியிலும் அல்லது பாதையிலும் எவரேனும் ஒருவர்-

I. ஒரு பலகையில், உதவுகையில் அல்லது சட்டகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஏதும் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்காகக் கொண்டு செல்லுதல் அல்லது கொண்டு செல்ல வைத்தல் கூடாது;

II. ஏதும் விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்தும் அல்லது அறிமுகப்படுத்தும் கருமத்துக்கென வானொலியை, கிராம்போனை, இசைக்கருவியை, மணியை அல்லது வேறேதும் உபகரணத்தை நகர சபையின் அனுமதியின்றிப் பயன்படுத்துதல் சட்டபூர்வமாக அமையாது.

15. I. ஏதும் விளம்பர அறிவித்தலொன்றில் அழகில்லாத அல்லது வெறுக்கத்தக்க, பொதுமக்களது கலாசாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் ஏதேனுமொன்றைக் காட்டும் சந்தர்ப்பத்தில், நகர சபை எழுத்துமூல அறிவித்தலொன்றின் மூலம் குறிப்பிட்டுள்ள காலத்துக்குள் குறித்த விளம்பரத்தைக் காட்சிப்படுத்துவதை நிறுத்துமாறு அதனைக் காட்சிப்படுத்துபவரை விதிக்க முடியும் ;

II. இந்தத் துணைவிதியின் I ஆவது பந்தியின் கீழ் அறிவித்தலொன்று கையளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்துக்குள் உரிய அறிவுறுத்தலைச் செயற்படுத்துதல் வேண்டும்.

16. விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஏதும் பலகையொன்றின் உரிமையாளர் அல்லது குத்தகையாளர்-

I. குறித்த பலகைகளில் உரிய திருத்த வேலைகளை மேற்கொண்டு ஆட்களது பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அதனைப் பராமரித்து வருதல் வேண்டும் ;

II. குறித்த பலகையின் முன்பக்கத்தில் நன்கு தென்படும் வண்ணம் தெளிவாகவும், வாசிக்கக்கூடிய எழுத்துக்களிலும் அவர்களது பெயர், முகவரியைக் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

17. ஏதேனுமொரு விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்குரிய அனுமதிக்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதனைக் காட்டுவதற்காக நகர சபை உட்படுத்தியுள்ள சின்னத்தை, குறியீட்டை, எழுத்தை, சொல்லை அல்லது இலக்கத்தை எவரும் சிதைத்து விடுதல் கூடாது.

18. மேற்குறித்த துணைவிதிகளின் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அல்லது அனைத்தையும் மீறுவது குற்றமாகும். உரிய அதிகாரம் கொண்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றத்துக்குக் குற்றவாளியாக ஆக்கப்பட்டால் விதிக்கப்படும் உச்சத் தண்டனைக்கும், குறித்த மீறல்களைத் தொடர்ந்து மேலும் செய்து குற்றவாளியாக ஆக்கப்பட்ட பின்னர் அந்த மீறல்களைக் குறித்துத் தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் எழுத்துமூலம் அறிவித்தல் கையளிக்கப்பட்ட பின்னர் அவ்வாறான மீறல்களைச் செய்யும் ஒவ்வொரு நாளுக்குமென விதிக்கப்பட முடியுமான அதிகபட்ச தண்டம் முறையே நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 153 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்பட்டுள்ள அதிகூடிய தண்டத்தினதும் மேலதிக தண்டத்தினதும் உச்ச தொகையாக இருத்தல் வேண்டும்.

19. 18 ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்படும் தண்டத் தொகை நகர சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

20. அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறாது நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் காட்சிப்படுத்தப்படும். துணைவிதி 04 இல் காட்டப்பட்டுள்ள அனைத்து விளம்பர அறிவித்தல்களையும் எவ்வித முன்னறித்தலுமின்றிச் சபை அகற்றி விடுவது சட்டபூர்வமானதாக அமையும்.

21. விளம்பர அறிவித்தலைக் காட்சிப்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற பின்னர் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலம் எஞ்சியிருந்தாலும் ஏதேனும் ஒரு வகையில் பொருத்தப்பட்ட சுவரில் அல்லது மதிலில் வரையப்பட்ட பதாதை, கட்அவுட், விளம்பரப்பலகை எவ்வகையிலேனும் காற்றில் சரிந்து கழன்று விழுந்தோ அல்லது நிறம் மாறி, உடைந்து, சிதைந்து நகரத்தின் வனப்பைக் குறைத்துவிடக் காரணமாக இருப்பின், அதுபற்றிய எழுத்துமூல அறிவித்தல் உரியவரிடம் கையளிக்கப்பட்ட 14 நாட்களுக்குள் இருந்தவாறு திருத்தியமைத்துவிட அறிவித்தல் விடுக்கப்படுதல் வேண்டும். அவ்வாறின்றேல், சபை அதனை அகற்றுதல் வேண்டும். சபை அவ்வாறு தெரிவித்த 14 நாட்களின் பின்னர் சபையின் பணியாட்களை ஈடுபடுத்தி விளம்பரத்தை அகற்ற நேரிட்டால், அந்த விளம்பரம் பற்றி எவ்விதத்திலும் சபை வகை சொல்லாது.

22. சொற்கள் பற்றிய விளக்கம் தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள -

''தலைவர்'' என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரையும் ;

''சபை'' என்பது, கடுகண்ணாவ நகர சபையையும் ;

''விளம்பர அறிவித்தல்'' என்பது, ஏதேனுமொரு கட்டடத்தில், காணியில், நிர்மாணத்தில் அல்லது அவ்வானவற்றுக்குமேல் விளம்பரத்துக்கென முழுமையான அல்லது அரைவாசியாக விளம்பரத்தின் தன்மையைக் காட்டும், விளம்பரமொன்றைக் காட்சிப்படுத்தும் எந்தவொரு எழுத்தையும், சொல்லையும், சில சொற்களையும், குறியீட்டையும், விளம்பரத் தாளையும், பலகையையும் ஏனைய நுட்ப முறைகளையும் குறிக்கும்.

23. இந்தத் துணை விதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே ஏதும் கருத்து மயக்கம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

**அட்டவணை - 01**

விளம்பர அறிவித்தல் பலகையைப் பொருத்துவதற்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரியின் பெயர் :-----.
முகவரி :-----.
விளம்பர நிறுவனம் :-----.
தொலைபேசி இலக்கம் :-----.

2. விளம்பர பலகை தொடர்பில் விளம்பர நிறுவனம் நியமித்துள்ள பொறுப்புள்ள அலுவலர் எனின்,
பெயர் :-----.
முகவரி :-----.
தொலைபேசி இலக்கம் :-----.

3. காணியின் உரிமையாளர்
பெயர் :-----.
முகவரி :-----.
மதிப்பீட்டு வரி இலக்கம் மற்றும் வீதியின் பெயர் :-----.
காணி உரிமையாளரின் விருப்பத்தைப் பெற்றுள்ளேன் /பெறவில்லை.

4. விளம்பரப் பலகை :

பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தகப் பெயர் :
விளம்பரப் பலகையின், நீளம் :---- ; அகலம் :---- ; சதுர அடிகள் :---- ;
இறுதியாக அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட வருடம் :---- ;

விளம்பரப் பலகையின் நிழற்படப் பிரதியொன்றையும் இணைக்கவும்.

5. விளம்பரப் பலகையைப் பொருத்தும் இடத்தின் அண்ணளவான வரைவு : (பொருத்தப்படும் இடத்துக்கு இலகுவில் செல்வதற்கான வகையில்) :

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

மேற்குறித்த தகவல்கள் உண்மையாவையென உறுதிப்படுத்துகின்றேன.

திகதி :----.

----
கையொப்பம்.

---

***அலுவலகப் பாவனைக்கு***

பரிந்துரை

கௌரவ தலைவரது அங்கீகாரம்

**அட்டவணை - 02**

சதுர அடிகள்

| தொடர் இல. | பலகையின் தன்மை | கட்டணம் (ரூபா) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 3 தினங்கள் அல்லது அதற்கு குறைந்த | 3-7 தினங்கள் | 7-14 தினங்கள் | 14-30 தினங்கள் | வருடம் |
| 1. | ஏதேனுமொரு சுவரில் அல்லது மதிலில் பிரசாரம் செய்யப்படும் விளம்பர அறிவித்தலுக்கு | 01 | 02 | 03 | 05 | - |
| 2. | துணி, டிஜிட்டல், பதாதைகள் | 25 | 34 | 45 | 50 | 75 |
| 3. | தகட்டில் அல்லது பலகையில் காட்சிப் படுத்தும் விளம்பர அறிவித்தல்கள் | 25 | 40 | 50 | 75 | 100 |
| 4. | மின்னொளியைப் பயன்படுத்திச் செய்யும் விளம்பர அறிவித்தல்கள் | 25 | 40 | 50 | 75 | 100 |
| 5. | இலத்திரனியல் உபகரணங்கள் பயன் படுத்தி செய்யப்படும் விளம்பர அறிவித்தல்கள் | 25 | 40 | 50 | 75 | 100 |
| 6. | பிளாத்திக் தகடு, கண்ணாடியிழைப் பலகையில் செய்யப்படும் விளம்பர அறிவித்தல்கள் | 20 | 30 | 40 | 50 | 75 |
| 7. | மெழுகுசீலை அல்லது காட்போட் அட்டையில் செய்யப்படும் விளம்பர அறிவித்தல்கள் | 30 | 05 | 07 | 10 | 25 |

**மத்திய மாகாண மாகாண சபை**

கடுகண்ணாவ நகர சபை

**துணைவிதிகள்**

(255 ஆவது அத்தியாயமான ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் 9 (ப) உப பிரிவின் கீழ் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கடுகண்ணாவ நகர சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2014, செத்தெம்பர் 15.

மரணச் சடங்குச் சேவைகளை வழங்கும் நிலையங்கள் பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் மரணச் சடங்குச் சேவைகள் வழங்கும் நிலையங்களை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் மரணச் சடங்குச் சேவைகளை வழங்கும் நிலையங்களை முறைப்படுத்தவும் மேற்பார்வை செய்யவும் கட்டுப்படுத்தவுமென இந்தத் துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

3. கடுகண்ணாவ நகர சபையின் தலைவரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் அல்லாது, எவரும் மரணச் சடங்குச் சேவைகள் வழங்கும் நிலையமொன்றை நடத்துதல் கூடாது.

4. மூன்றாவது துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஏற்கனவே தலைவரால் இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எந்த வருடத்துக்கென வழங்கப்பட்டதோ, அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

5. இந்தத் துணைவிதிகளின் நியமங்களை அவ்வாறே முழுமையாக நிறைவேற்றினாலன்றி, கடுகண்ணாவ நகர சபையின் தலைவர் மரணச் சடங்குகள் நிறைவேற்றும் நிலையமொன்றுக்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் கூடாது.

I. மரணச் சடங்குச் சேவைகள் வழங்கும் நிலையத்தை நடத்திச் செல்லும் கட்டடத்தின் உள்ளே இறந்த உடலைத் தயார் செய்வதற்கென வேறாக்கப்பட்ட அறையொன்று இருத்தல் வேண்டும். குறித்த அறையில் ஒருவரது இறந்த உடலைத் தயார் செய்வதற்கென ஒன்பது சதுர மீற்றருக்குக் குறையாத இடவசதி இருத்தல் வேண்டும். மேலும், குறித்த கருமத்தை நிறைவேற்றுவதற்கெனப் போதுமான கொங்கிறீட் மேடையொன்று அமைக்கப்பட்டும், அது பீங்கான கற்கள் பதிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

II. இறந்த உடல் தயார் செய்யப்படும் அறை எப்போதும் மரணச் சடங்குச் சேவைகளை வழங்கும் நிலையத்தின் காட்சியறையிலிருந்து வேறாகப் பிரிக்கப்பட்டிருப்பதுடன், அனுமதியின்றி வெளி ஆட்கள் நுழைவதும் தடுக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

III. இறந்த உடல் தயார் செய்யப்படும் அறையின் உட்பகுதிக்குத் தூய்மையான காற்றோட்டம் கிடைக்கும் வண்ணம் அறையின் பரப்பளவின் ஏழில் ஒரு பங்கிற்குக் குறையாத யன்னல் வழியைக் கொண்டதாக அது இருத்தல் வேண்டும். ;

IV. இறந்த உடலைத் தயார் செய்யும் போது அகற்றப்படும் உடலின் உறுப்புக்களைத் தற்காலிகமாக இட்டு வைக்கப்போதுமான அளவில் கொள்கலன்கள் இருத்தல் வேண்டும். குறித்த கருமத்தை நிறைவேற்றும்போது இறந்த உடலிலிருந்து வெளியேறும் குருதி அல்லது வேறேதும் திரவங்கள் அல்லது இறந்த உடலைக்

கழுவுவதாயின், அந்த அசுத்த நீர் விஷக் கிருமிகள் மற்றும் ஈக்கள், எலிகள் மற்றும் ஏனைய விலங்குகள் நுழைய முடியாத விதத்தில் அவை அமைந்திருத்தல் வேண்டும். அவ்வாறான அசுத்தங்களை எக்காரணம் கொண்டும் பொது வடிகானிலோ, பொது நீரோடையிலோ அல்லது திறந்த வெளித் தரையிலோ வடிந்தோடச் செய்தல் கூடாது.

V. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் மக்கள் அஞ்சலிக்காக இறந்த உடலை வைக்க வசதி செய்யப்பட்ட வேளைகளில், ஏதேனும் இறந்த உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக வருகை தருவோரது வசதி கருதிப், போதுமான அளவில் இருக்கைகள் வைக்கப்பட்டும், அவ்வாறு வருகை தருவோரது வாகனங்களைத் தரிக்கச் செய்யும் இடவசதியும் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

VI. விற்பனைக்கென வைக்கப்பட்டுள்ள சவப்பெட்டிகளையும் மலர் வளையங்களையும் காட்சிப்படுத்தும்போது, அவ்வாறு செய்யப்படும் மண்டபம் அல்லது அறை கறுப்பு நிறக் கண்ணாடியினால் வெளியில் தென்படாதவாறு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. மரணச் சடங்குச் சேவைகள் நிலையமொன்றுக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கென ஒருவர் இந்தப் பிரிவின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைக் கடுகண்ணாவ நகர சபையின் தலைவரிடம் கையளித்தல் வேண்டும்.

7. இறந்த உடலொன்றைத் தயார் செய்யும்போது நீக்கப்படும் அல்லது நீங்கும் உடற் பாகங்கள், நீதிமன்ற நீதிபதி அல்லது மரண விசாரணை அதிகாரி இது பற்றி வழங்கிய தீர்ப்புகள் இல்லாத பட்சத்தில், குறித்த கருமம் நிறைவடைந்த ஆறு மணி நேரம் முடிவடைவதற்குள், அந்த உடற் பாகங்களைத் தரை மட்டத்திலிருந்து 1.2 மீற்றர் ஆழமான குழியொன்றில் புதைத்துக் குழியைப் நன்கு மூடிவிடுதல் வேண்டும்.

8. இறந்த உடலொன்றைத் தயார் செய்யும்போது நீக்கப்படும் அல்லது நீங்கும் உடற்பாகங்கள் பற்றி நீதிமன்ற நீதிபதி அல்லது மரண விசாரணை அதிகாரி ஏதும் தீர்ப்புகள் வழங்கியிருந்தால், அந்தத் தீர்ப்புக்கு அமையச் செயற்படுவது அனுமதிப்பத்திரதாரியின் கடமையாகும்.

9. 7 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள கருமத்துக்கென மரணச் சடங்கு சேவைகள் வழங்கும் நிலையத்தில் போதுமான அளவு இடவசதிகள் இல்லாத பட்சத்தில், சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும் கட்டணமொன்றைச் செலுத்தியதன் பின்னர் குறித்த கருமத்தைக் கடுகண்ணாவ நகர சபையின் பொது மயானத்தில், இந்தத் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆழத்தில் புதைத்து விடுதல் வேண்டும்.

10. இறந்த உடலைத் தயார் செய்யும் அறையை நிதமும் கிருமிநாசினிகள் இட்டுச் சுத்தமாகப் பேணிவருதல் வேண்டும்.

11. இறந்த உடலைத் தயார் செய்யும் அறைகளில் பணியாற்றும் ஊழியர் அனைவருக்கும் கடுகண்ணாவ நகர சபையின் தலைவர் பரிந்துரை செய்யும் பாதுகாப்பு உடைகள், முகமூடிகள், கையுறைகள் என்பவற்றை வழங்குவதும், இறந்த உடலைத் தயார் செய்யும் வேளையில் குறித்த பணியாட்கள் அந்த உடைகளையும் அணிகலன்களையும் அணிந்துள்ள நிலையில் கடமையில் ஈடுபடுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதும் அனுமதிப்பத்திரதாரியின் கடமையாகும்.

12. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களையும் ஆகக் குறைந்தது ஒரு வருடத்தில் ஒரு தடவையேனும், மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவது அனுமதிப்பத்தாரியின் கடமையாகும்.

13. இறந்த உடலைக் கொண்டு செல்லும் வாகனத்தை அல்லது அதன் உட்பகுதியை ஒரு நாளில் குறைந்தது ஒரு தடவையேனும் கிருமிகொல்லிகளைத் தெளித்துச் சுத்தம் செய்து வைத்திருத்தல் வேண்டும்.

14. அதிக காயங்களுக்கு உள்ளான அல்லது வேறேதும் காரணங்களை முன்னிட்டுத் தயார் செய்ய முடியாத நிலையிலுள்ள இறந்த உடல்களைத் தவிர, ஏனைய இறந்த உடல் எதனையும் வைத்துள்ள பெட்டியின் உள்ளே இறந்த உடலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மறைப்பதற்காகப் பொலித்தின் அல்லது உக்கலடையாத எந்தப் பொருளையும் பயன்படுத்துதல் கூடாது.

15. கடுகண்ணாவ நகர சபையின் தலைவரால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கமைய, அவர் இதற்கென அனுமதிப்பத்திரதாரிக்கு வழங்கும் எழுத்துமூல அனுமதி இருந்தாலன்றி, வாந்திபேதி, அம்மை, மஞ்சட் காய்ச்சல் அல்லது எயிட்ஸ் நோயினால் இறந்தவரெனக் கருதப்படும் எவரது இறந்த உடலையும் எவரும் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டுள்ள இடத்துக்குக் கொண்டுவருதலோ அல்லது கொண்டுவர இடமளித்தலோ கூடாது.

16. எந்தவொரு இறந்த உடலையும் தயார் செய்வதற்கோ அல்லது இறுதிச் சடங்குகளை நிறைவேற்றுவதற்கோ ஏற்பாடுகளைச் செய்ய முன்னர், குறித்த இறப்பு தொடர்பாக இறப்புகளைப் பதிவு செய்யும் பதிவாளர் வழங்கிய முறையான மரண அத்தாட்சிப்பத்திரம் இருந்தாலொழிய, குறித்த கருமங்களுக்கென இறந்த உடலென்றை அனுமதிப்பத்திரதாரி ஏற்றுக்கொள்ளல் கூடாது.

17. எந்தவொரு இறந்த உடலும் அது திடீர் மரணம் எனக் கருதப்படுமிடத்து அல்லது சந்தேகத்துக்கிடமானது எனக் கொள்ளப்படுமிடத்து, நீதிபதியினால் மேற்கொள்ளப்படும் மரண விசாரணைகளை அடுத்து வழங்கப்படும் அறிக்கையைத் தம்மிடம் சமர்ப்பித்தாலொழிய, குறித்த இறந்த உடலைத் தயார் செய்வதற்கென எவரும் பொறுப்பேற்றல் கூடாது.

18. நீதிபதி ஒருவரால் அல்லது மரண விசாரணை அதிகாரியினால் நடத்தப்படும் திடீர் மரண விசாரணையை அடுத்து வழங்கப்படும் அறிக்கையில், குறித்த உடலின் இறுதிக் கிரியைகள் பற்றி வழங்கப்பட்டுள்ள ஏதும் தீர்ப்புக்கள் இருப்பின், அவற்றின் ஏற்பாடுகளுக்கமைய அவற்றைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

19. மக்களது அஞ்சலிக்கென இறந்த உடலை வைத்திருக்கும் இடத்தைத் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்கச் செய்வது அனுமதிப்பத்திரதாரியின் கடமையாகும்.

20. இறுதிச் சடங்குச் சேவைகளை வழங்கும் நிலையத்தைச் சூழவுள்ள குடியிருப்பாளர்களுக்குத் தொல்லை தரும், அல்லது பீடைதரும் எவ்விதக் கருமங்களையும் இறுதிச் சடங்குச் சேவை நிலையத்தின் வளவுக்குள் எவரும் செய்தல் அல்லது செய்ய இடமளித்தல் கூடாது.

21. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அத்தியாயம்) 153 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

22. 21 ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்படும் தண்டத் தொகை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் என்பன நகர சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

23. சொற்பத விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளில் -

(அ) ''சபை'' என்பது, கடுகண்ணாவ நகர சபையையும் ;

(ஆ) ''தலைவர்'' என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரையும் ;

(இ) ''அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்'' என்பது கடுகண்ணாவ நகர சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும் ;

(ஈ) ''மரணச் சடங்குச் சேவைகள் வழங்கும் இடம்'' எனப்படுவது, ஏதேனும் இறந்த உடலொன்றைச் சில நாட்களுக்கு வைத்துக்கொள்வதற்கு ஏற்ற வகையில் அதனைத் தயாரிப்பது அல்லது இறந்த உடலொன்றை இறுதிக் கிரியைகளுக்கெனத் தயார் படுத்தும், அல்லது இறுதித் கிரியைகளை மேற்கொள்வதற்கென மயானத்துக்குக் கொண்டு செல்லும் வரை ஏதும் தொகையொன்றைப் பெற்றுக்கொண்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் இடத்தையும்;

(உ) ''இறந்த உடலைத் தயார் செய்தல்'' என்பது, இறந்த ஒருவரது உடலைச் சில காலம் வைத்துக்கொள்வதற்கு ஏற்ற வகையில் அதனை ஆயத்தம் செய்தல், குறித்த இறந்த உடலுக்கு ஆடை அணிவித்தல், அதனைப் பெட்டியொன்றில் வைத்தல் மற்றும் அதற்கெனத் தேவைப்படும் எந்தக் கருமத்தையும் மேற்கொள்வதையும் ;

(ஊ) ''இறந்த உடலின் உடற் பாகங்கள்'' எனப்படுவது, இறந்த ஒருவரது உடலிலிருந்து அகற்றப்படும் ஏதும் உடலுறுப்புக்களையும் அல்லது அவற்றின் பகுதிகளையும், அதன் உட்பகுதிகளையும், இறந்த உடலிருந்து வெளியேறும் அல்லது வெளியேற்றப்படும் இரத்தம் அல்லது ஏதும் திரவங்கள் அல்லது இறந்துபோகும் தருணத்தில் அணிந்திருந்த ஆடைகள், உடைகள் அல்லது அவற்றின் பகுதிகள் அல்லது இறந்தவரது உடலில் இருந்த ஏதும் காயங்கள் அல்லது வேறேதும் காரணங்களால் அவரது உடலின் உட்பகுதியில் இருந்த அல்லது இருக்கும் பண்டேஜ் துணி, பஞ்சு அல்லது வேறேதும் பொருட்களையும் குறிப்பிடும்.

24. இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏதும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

7- 279/5

**மத்திய மாகாண மாகாண சபை**

கடுகண்ணாவ நகர சபை

**துணைவிதிகள்**

*(255 ஆவது அத்தியாயமான ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் 9 (க) உப பிரிவின் கீழ் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கடுகண்ணாவ நகர சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,*
*மத்திய மாகாணம்.*

*மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,*
*கண்டி,*
*2014, செத்தெம்பர் 15.*

பீடைதரும் வியாபார முயற்சிகள்/அபாயகரமான வியாபார முயற்சிகள் பீடைதரும் மற்றும்
அபாயகரமான வியாபார முயற்சிகள் பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் பீடைதரும் வியாபார முயற்சிகள்/ அபாயகரமான வியாபார முயற்சிகள் மற்றும் அபாயகரமான வியாபார முயற்சிகளை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல், பரீட்சித்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் கட்டணம் அறவிடுதல் என்பவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கென இந்தத் துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

2. கடுகண்ணாவ நகர சபையின் தலைவரால் இதற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் மீதலல்லாது எந்தவொரு நபரும் பிரதேச சபை எல்லைக்குள் முதலாவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள பீடைதரும் வியாபார முயற்சிகள் அல்லது அபாயகரமான வியாபார முயற்சிகள் அல்லது பீடைதரும் அபாயகரமான வியாபார முயற்சிகளை நடத்திச் செல்லல் கூடாது.

3. ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்டாலன்றி அவ்வாறான ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் அது எந்த வருடத்துக்காக வழங்கப்பட்டதோ குறித்த அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரை செல்லுபடியாகும்.

4. வியாபார முயற்சியின் சுற்றுச் சூழலிலும், குறித்த கருமத்துக்கெனப் பயன்படுத்தப்படும் கட்டடம் ஏதும் இருப்பின் அந்தக் கட்டடத்திலும், பின்வரும் நிபந்தனைகளுக்கு அமையாத எந்தவொரு நபரும் பீடைதரும் வியாபார முயற்சி அல்லது அபாயகரமான வியாபார முயற்சி மற்றும் பீடைதரும் அபாயகரமான வியாபார முயற்சியொன்றை நடத்திச் செல்வதற்காக அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கு உரித்துடையவரல்லர்.

(அ) வளவு நல்ல மறுசீரமைப்புச் செய்த நிலையிலும், நல்ல காற்றோட்ட வசதியுடன் வெளிச்சம் பெறும் வகையிலும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு அறையைத் திறந்ததும் அதன் தரையளவின் பதினைந்தில் ஒரு பகுதிக்குக் குறையாத அளவில் யன்னல்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) ஒவ்வொரு அறையினதும் சுவர்களில் எல்லாப் பகுதிகளதும் உயரம் 2.14 மீற்றருக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். செங்கல், கருங்கல், கபொக் கல் அல்லது சிமெந்துக்கல் போன்றவற்றினால் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். சுவர்களின் உட்பகுதி தரைமட்டத்திலிருந்து குறைந்தது 2 மீற்றர் உயரத்துக்குச் சிமெந்துச் சுதை பூசப்பட்டு எஞ்சிய பகுதியில் சுண்ணாம்புச்சுதை தடவப்பட்டு வெள்ளையடிக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(இ) ஒவ்வொரு கூரையின் மூலையும் தரைமட்டத்திலிருந்து 2 மீற்றரைவிடக்கூடிய உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) மேற்கூரை ஏதும் நிலையான பொருளைக் கொண்டு அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) அரிமரங்கள் அனைத்தின் மீதும் எண்ணெய்ச் சாயம் அல்லது சுண்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) முழுத்தரையும் சிமெந்தினால் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(எ) வளவு போதியளவு நீர் வடிந்தோடும் வண்ணம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

வளவு சுகநலக் குப்பைத் தொட்டிகளுடனும் போதுமான அளவில் மலசலகூட வசதிகளுடனும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5. அனுமதிப்பத்திரதாரி ஒவ்வொருவரும் தமது வியாபார முயற்சியைத் தொடருவதற்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் துர்நாற்றம் வராது அல்லது ஏனைய பீடைகள் உண்டாகாதவாறு களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும்.

6. அனுமதிப்பத்திரதாரி ஒவ்வொருவரும் பீடைகளை ஏற்படுத்தும் அல்லது துர்நாற்றத்தை ஏற்படுத்தும் எனக் கருதப்படும் பொருட்களைப் பொது இடங்களிலோ அல்லது வீதிகளிலோ கொண்டு செல்லும்போது பீடைகள் ஏற்படாதவாறு மூடிமறைத்து, உறிஞ்செடுக்க முடியாத கொள்கலன்களில் இட்டு எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

7. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் ஏதேனும் உற்பத்திச் செயன்முறையின்போது வெளியேற்றப்படும் பீடைதரும் ஆவி அல்லது வாயு அங்கு பரவிச் செல்லும்போது பாதிப்பையோ அல்லது பீடையையோ ஏற்படுத்ததாத வகையில் அவற்றை உயரத்தில் வளிமண்டலத்தில் விடுவித்தல் வேண்டும். அல்லது தீயினாலோ உருகக்கூடிய உபகரணத்தினாலோ அவற்றை அகற்றுதல் வேண்டும்.

8. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியை நடத்திச் செல்லும் வளவுக்குள் போதியளவு வடிகான்களை அமைத்து, அவற்றை நன்கு பராமரித்தும் நாளாந்தம் கழுவியும் வருதல் வேண்டும்.

9. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியை நடத்திச் செல்லும் மனைத்தளத்தை உறுதியான பொருளினால் நிர்மாணித்தல் வேண்டும். மேலும் நல்ல மறுசீரமைப்புச் செய்தும் பராமரிப்புச் செய்தும் நாளாந்தம் சுத்தம் செய்தும் வருதல் வேண்டும்.

10. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியை நடத்திச் செல்லும் காலத்துக்குள் வருடாந்தம் வளவுக்கு வெள்ளையடித்தல் வேண்டும்.

11. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது வியாபார முயற்சியின்போது பயன்படுத்தும் பாத்திரங்கள், கருவிகள் போன்ற அனைத்தையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

12. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் வியாபார முயற்சியை நடத்திச் செல்லும் வளவுக்குள் கழிவுப்பொருட்கள், கூட்டிப் பெருக்கும் துகள்கள், குப்பைகள் என்பவற்றுடன் வெளியேற்றப்பட்ட பொருட்கள், துணை உற்பத்திகள் என்பவற்றை உடனடியாகத் தமது தொழில் முயற்சியில் ஈடுபடுத்துவதில்லையெனில், அவற்றை மூடப்பட்ட பாத்திரங்களில் இட்டுப் பிரதேச சபை நியதிக்கமைய நாளாந்தம் வெளியேற்றுதல் வேண்டும்.

13. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தோல் அல்லது ஏனைய பொருட்களைக் கழுவ அல்லது ஊறவைக்கப் பயன்படுத்தும் தாங்கியிலிருந்து துர்நாற்றம் வீசுவதைத் தவிர்ப்பதற்காகத் தேவைக்கேற்றவாறு அவற்றை வெளியேற்றிச் சுத்தம் செய்தல் வேண்டும்.

14. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் ஏதேனும் ஆற்றிலோ அல்லது தண்ணீர் செல்லும் வழியிலோ, நீரோடையிலோ, வான்கதவிலோ, கிணற்றிலோ, குளத்திலோ அல்லது ஒரு வடிகானிலோ ஏதும் அழுக்கான துர்நாற்றம் வீசும் அல்லது பீடைதரும் தண்ணீரையோ அல்லது திரவத்தையோ அனுப்புவதும் வடியச் செய்வதும் அல்லது பீடைதரும் திரவத்தின் மூலம் கழுவுவதும் அல்லது வேறு வழிகளில் ஆற்றிலோ தண்ணீர் வடிந்தோடும் வழியிலோ, நீர்நிலையிலோ, வான்கதவிலோ, கிணற்றிலோ, குளத்திலோ, வடிகானிலோ அல்லது திறந்த நீர்ப்பிரதேசத்திலோ இட்டு அசுத்தமடையச் செய்தல் கூடாது.

15. தலைவர் அல்லது அந்தக் காரியத்தைச் செய்யப் பொதுவாகவோ விசேடமாகவோ அதிகாரமளிக்கப்பட்ட சபையின் அலுவலரால் கடமை நேரத்தில் பீடைதரும் தொழில் முயற்சி அல்லது அபாயகரமான தொழில் முயற்சி அல்லது அபாயகரமான பீடைதரும் தொழில் முயற்சியை நடத்திச் செல்லும் வளவுக்குள் பிரவேசித்துப் பரீட்சித்துப் பார்ப்பது சட்டபூர்வமானதாக அமையும். மேலும் அனுமதிப்பத்திரதாரி அல்லது அவரது நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருப்பவர் அவ்வாறான பரிசீலனைக்கு இடமளித்தல் வேண்டும்.

16. அனுமதிப்பத்திரத்துக்குரிய வளவொன்று இந்தத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக இருக்கவில்லையெனப் பரிசீலனையின் போது காணப்படும் சந்தர்ப்பங்களில் உரிய வளவு இந்தத் துணைவிதிகளுக்கு அமைவானதாக ஆக்கப்படுவதற்குச் செய்யப்படவேண்டியவற்றை உரிய காலத்துக்குள் மேற்கொள்ள வேண்டுமென அனுமதிப்பத்திரதாரிக்கு எழுத்துமூல அறிவித்தலொன்றை வழங்கத் தலைவருக்கு அதிகாரமுண்டு. மேலும், குறித்த அறிவித்தலின் ஏற்பாடுகளுக்கமைய அனுமதிப்பத்திரதாரி செயற்படுதல் வேண்டும். அவ்வாறு செயற்படாதவிடத்து, அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறித்த அனுமதிப்பத்திரத்தைச் செல்லுபடியற்றதாக ஆக்கத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

17. இந்தத் துணைவிதிகளின் கீழ் ஏதேனுமொரு தொழில் முயற்சியை மேற்கொள்வதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கெனத் தம்மிடம் ஒருவர் முன்வைக்கும் விண்ணப்பப்படிவத்தை அது கிடைத்த 30 நாட்களுக்குள் குறித்த வளவு இந்தத் துணைவிதிகளுக்கு அமைவாக இருக்கின்றது. அல்லது குறித்த வளவு இந்த துணைவிதிகளுக்கு அமைவாக இல்லையெனவும் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படுவதற்கான காரணங்களும் அளிக்கப்படவேண்டும்.

18. ஒவ்வொரு அனுமதிப்பத்திரதாரியும் தமது அனுமதிப்பத்திரத்தையும் அனுமதிப்பத்திரத்துக்குரிய கைத்தொழிலிலோ அல்லது தொழிலிலோ ஈடுபட்டுள்ள ஊழியர்களது பெயர், முகவரிகளைச் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் காட்டும் பட்டியலை அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் நிலையத்தில் பகிரங்கமாகத் தெரியும் வண்ணம் தொங்க வைத்தல் வேண்டும்.

19. இந்தத் துணைவிதிகளின் கீழ் செய்யப்படும் ஒவ்வொரு அறிவித்தலும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு உரிமையாளர் அல்லது அந்த நிலையத்தின் பொறுப்பாளரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஒருவர் இல்லாத பட்சத்தில் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள இடத்தல் பகிரங்கமாகத் தென்படும்படி தொங்கவிடப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறான அறிவித்தலொன்றில் நிலையத்தின் உரிமையாளர் அல்லது அங்கு செயற்படுவோரது பெயர் குறிப்பிடப்படுவது தேவையற்றதாகும்.

20. இந்தக் கட்டளைச் சட்டத்தின் 164 ஆவது வகுதியின் கீழ் அனுமதிப்பத்திரம் தேவைப்படும் கைத்தொழில் அல்லது தொழில் முயற்சிகள் சில ஒரே இடத்தில் நடத்திச் செல்லப்படும் சந்தரப்பத்தில் அவ்வாறு தனித்தனியாக ஒவ்வொரு கைத்தொழில் முயற்சிக்குமெனச் செலுத்தப்படவேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் குறித்த கைத்தொழில் அல்லது தொழில் முயற்சிக்கெனப் பயன்படுத்தும் அல்லது ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் தனித்தனியாக அறவிடப்படுதல் வேண்டும்.

21. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அத்தியாயம்) 153 (2) ஆவது பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

22. 22ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்படும் தண்டத் தொகை நகர சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

23. சொற்பதங்கள் தொடர்பாக மேலதிக விளக்கங்கள் தேவைப்பட்டாலன்றி, இந்தத் துணைவிதிகளில் –

''அனுமதிப்பத்திரதாரி'' என்பது, இந்தத் துணைவிதியின் கீழ் தொழில் முயற்சியை நடத்திச் செல்வதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் ஒருவரையும் ;

''நபர்'' என்பது, கூட்டுச்சேர்க்கப்பட்ட அல்லது அவ்வாறு செய்யப்படாத ஆட்கள் குழுவையும் ;

''நிர்வாகப் பொறுப்பாளர்'' என்பது, பொறுப்பாளர், பாதுகாப்பாளர், சொத்துக்களைப் பாதுகாப்பவர், முகாமையாளர் அல்லது ஏதேனும் ஒருவருக்காகக் குறித்த ஒரு தொழில் முயற்சியின் ஏற்பாடு, நிர்வாகம், அல்லது முகாமை சாட்டப்பட்டுள்ள ஒருவரையும் ;

''சபை'' என்பது, கடுகண்ணாவ நகர சபையையும் ;

''தலைவர்'' என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரையும் ;

"நகர சபைப் பிரதேசம்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாகத்துக்கு உட்பட்ட எல்லையையும் ;

"அதிகாரமளிக்கப்பட்ட நகர சபையின் அலுவலர்" என்பது, தலைவரால் இந்தத் துணைவிதிகளைச் செயற்படுத்துவதற்கென அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அலுவலர் அல்லது அலுவலர்களையும் குறிப்பிடும்.

*24.* இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களிடையே ஏதும் கருத்துச் சிதைவுகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

## அட்டவணை - 01

**பீடைதரும் தொழில் முயற்சிகள் :**

1. உரம் அல்லது இரசாயனப் பசளை வகையை உற்பத்தி செய்வது அல்லது களஞ்சியப்படுத்தி வைப்பது
2. தோல் பதனிடுதல்
3. தோல் விற்பனை செய்வது
4. கால்நடை வளர்ப்பு (இறைச்சிக்காக, பாலுக்காக, முட்டைக்காக)
5. புகைப்பட நிலையமொன்றை நடத்துதல்
6. கால்நடை மருந்தகம் நடத்துதல்
7. விற்பனைக்காகப் பழுதடைய இடமுள்ள உணவுவகைகளையோ அல்லது உணவுப் பொருட்களையோ களஞ்சியப்படுத்தி வைத்தல்.
8. கருவாடு, உப்புமீன் அல்லது ஜாடி 150 கிலோகிராமைவிட அதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
9. சிரட்டைக்கரி அல்லது விறகுக்கரி தயாரித்தல் அல்லது கரியைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
10. புகையிலை பதப்படுத்துதல் அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையம் நடத்துதல்
11. விலங்கு உணவு உற்பத்தியும் விலங்கு உணவுக் களஞ்சியமும் நடத்துதல்
12. புண்ணாக்கு தயாரிப்பு அல்லது 200 கிலோகிராமைவிட அதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
13. சவர்க்காரம் உற்பத்தி செய்தல்
14. விலங்குகளின் எலும்பு அரைப்பது அல்லது வைத்திருப்பது
15. புதிய அல்லது பழைய உலோகங்களைக் களஞ்சியப்படுத்தல்
16. உலோக கழிவுப் பொருட்களின் களஞ்சியப்படுத்தல்
17. வீட்டுத் தளபாட உற்பத்தியும் களஞ்சியமும் நடத்துதல்
18. பிரம்புப் பொருட்கள் தயாரிப்பு
19. தச்சுத் தொழிற்கூடம் நடத்துவது
20. பழப்பாகு அல்லது பானம் தயாரித்தல்
21. இனிப்பு வகைகள் தயாரித்தல்
22. தென்னை மட்டையை ஊறவைத்தல் (அவியச் செய்தல்)
23. தூரிகை தயாரித்தல் (பறதூரிகை தவிர்ந்த)
24. பற்தூரிகை உற்பத்தி
25. கள் வடித்தல்
26. வினாகிரித் தயாரிப்பும் களஞ்சியமும்
27. பொறிமுறையினாலோ அல்லது கையினாலோ மரம் கிழிக்கும் நிலையம் நடத்துதல்
28. அச்சு மை, பூச்சு மை, வார்னிஷ் அல்லது டிஸ்டெம்பர் சாயம் அல்லது 100 இலீற்றரைவிட அதிகம் களஞ்சியப்படுத்துதல்
29. சோடா உற்பத்தி
30. தோல்பொருட்கள் தயாரிப்பு
31. பழவகை, மீன் அல்லது ஏனைய உணவு வகைகளைத் தகரத்தில் அடைத்தல்
32. மிளகாய், கோப்பி, தானியங்கள், அவரைப்பயிர்கள், கறிச்சரக்குப் பொருட்கள் அல்லது மா அரைக்கும் ஆலையை நடத்துதல்
33. மெழுகுதிரி உற்பத்தி செய்தல்

**அட்டவணை - 01** *(தொடர்ச்சி)*

34. கற்பூர உற்பத்தி
35. எழுத்துமை, அச்சுமை, ஸ்டென்சில் மை தயாரிப்பு
36. ஆடை கழுவும் நீலத் தயாரிப்பு
37. அரக்கு உற்பத்தி
38. வாசனைத் திரவியங்களின் உற்பத்தியும் களஞ்சியமும்
39. பாடசாலை வெண்கட்டித் தயாரிப்பு
40. டயர் அல்லது டியூப் 30இலும் அதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
41. டயர் மீள நிரப்புதல்
42. டயர், டியூப் வொல்கனைசுப்படுத்தும் நிலையம் நடத்துதல்
43. 1,000 கிலோகிராமுக்கு அதிகமாகச் சிமெந்து களஞ்சியம் நடத்துதல்
44. சிமெந்துப் பொருட்கள் அல்லது அஸ்பெஸ்டோஸ் சிமெந்துப் பொருட்கள் தயாரித்தல்
45. பிளாத்திக் பொருட்கள் உற்பத்தி
46. விசைத்தறி நிலையம் நடத்துதல்
47. பசளை, சுண்ணாம்பு, மா அல்லது வேறு பொருட்கள் இட்டுவைத்த கோணிப்பைகளைச் சுத்தமாக்கி விற்பனை செய்தல்
48. பொறிமுறையில் சிமெந்து அச்சுக்கல் தயாரித்தல்
49. தானியங்கள் அல்லது அவரையினங்களில் 250 கிலோகிராமைவிட அதிக அளவில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல்

**அட்டவணை - 02**

***அபாயகரமான தொழில் முயற்சிகள் :***

1. மொத்த வியாபாரத்துக்கென மா, உப்பு, சீனி என்பவற்றை 750 கிலோகிராமைவிட அதிகமாகக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
2. தைத்த ஆடைகள் தயாரிப்பு
3. அச்சகம் ஒன்றை நடத்துதல்
4. 100இற்கு மேற்பட்ட கோழிகளைக் கொண்டுள்ள கோழிக்கூடு அல்லது கோழிப்பண்ணை நடத்துதல்
5. 10 இற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் ஆடு, பன்றிக் கொட்டில் அல்லது பண்ணையை நடத்துதல்
6. செங்கல் அல்லது ஓடு களஞ்சியப்படுத்தி வைத்தல்
7. விறகுக் களஞ்சியம் நடத்துதல்
8. இயந்திரத்தினால் அல்லது கையினால் கருங்கல் அகழ்தல் அல்லது உடைத்தல்
9. குளிர்பான உற்பத்தி அல்லது 100 இற்கும் மேற்பட்ட குளிர்பான போத்தல்களைக் களஞ்சியப்படுத்தி வைத்தல்
10. ஐஸ்கிரீம் தயாரிப்பு
11. தேங்காயெண்ணெய்த் தயாரிப்பு அல்லது 300 லீற்றரைவிட அதிகம் களஞ்சியப்படுத்துதல்
12. தீப்பெட்டி உற்பத்தி அல்லது 100 டசினுக்கு மேற்பட்ட அளவில் களஞ்சியம் செய்தல்
13. தும்பு அல்லது ஏனைய நார்களால் பொருட்கள் செய்வதும் களஞ்சிப்படுத்துதலும்
14. பாவிக்கப்பட்ட உடுதுணி வகைகளைக் களஞ்சியப்படுத்துதல்
15. தங்க நகைத் தயாரிப்பும் திருத்த வேலையும்
16. பொறிமுறை மரம் அரிதல்
17. பொறிமுறைப் பட்டறை வேலைத்தளம் நடத்துதல்
18. வெற்றுக் கோணிப்பை, வெற்றுப்போத்தல் களஞ்சியம் நடத்துதல்
19. மிதிவண்டி, மோட்டார் சைக்கிள் திருத்தும் வேலைத்தளம்
20. பழைய பேப்பர் களஞ்சியம் நடத்துதல்
21. விசிறும் சாயம் - ஸ்பிறே பெயிண்டிங் - பூசும் நிலையம் நடத்துதல்
22. வாணவேடிக்கை மற்றும் பட்டாசுக் களஞ்சியம் நடத்துதல் அல்லது தயாரித்தல்
23. தேங்காயெண்ணைய் தவிர ஏனைய காய்கறி எண்ணெய் 50 இலீற்றரைவிட அதிகமாகக் களஞ்சியப்படுத்துதல்
24. குளிரூட்டிய இறைச்சி, மீன் களஞ்சியம் நடத்துதல்
25. அரிமரக் களஞ்சியம் நடத்துதல்.

**அட்டவணை - 03**

***பீடைதரும் மற்றும் அபாயகரமான தொழில் முயற்சிகள் :***

1. இரசாயனங்களைப் பயன்படுத்தி கறுவா, ஏலம், கராம்பு அல்லது நார் வகைகளைப் பதப்படுத்துதல்
2. சாயமூட்டுதல் அல்லது உலர் சலவை செய்தல்
3. துணி அச்சிடுதலும் சாயமூட்டுதலும்
4. மின்னியல் முலாம் பூசும் நிலையம் நடத்துதல்
5. சுண்ணக்கல் அல்லது முருகைக்கல் சுடுதல், தயாரித்தல் அல்லது நீற்றுச் சுண்ணக் களஞ்சியம் நடத்துதல்
6. பற்றரி மின்னேற்றம் செய்தல் அல்லது திருத்தம் செய்யும் நிலையம்
7. மோட்டார் வாகனம் திருத்தும் நிலையம் நடத்துதல்
8. மோட்டார் வாகனம் சேர்விஸ் பராமரிப்பு நிலையம் நடத்துதல்
9. தகர வேலைத்தளம் நடத்துதல்
10. திரவவாயுக் கொள்கலன் களஞ்சியம் நடத்துதல்
11. ஆயுர்வேத மருந்து, தேசிய மருந்துகள் தயாரிப்பு அல்லது கலவை செய்தல்
12. கண்ணாடியும் கண்ணாடித் தகடும் களஞ்சியப்படுத்தல்
13. பிளாத்திக் அல்லது கண்ணாடியிழைத் தொழிற்சாலை நடத்துதல்
14. 150 கிலோகிராமைவிட அதிகமாக தேயிலைத்தூள் களஞ்சியம் நடத்துதல்
15. காய்ச்சி ஒட்டும் வேல்டிங் பட்டறை நடத்துதல்
16. கடைசல் பட்டறை நடத்துதல்
17. பெற்றோல், தீசல் எண்ணெய் அல்லது ஏனைய கனியநெய் வகைகளின் களஞ்சியம் நடத்துதல்
18. விவசாய இரசாயனப் பொருட்கள் தயாரிப்பும் களஞ்சியமும்
19. வளிசீராக்கி, குளிரூட்டி, அதிகுளிரூட்டி திருத்தவேலை நிலையம்
20. மின்னியல் தொழில் அல்லது மின் உபகரணங்கள் தயாரிப்பு அல்லது திருத்த வேலை நிலையம் நடத்துதல்
21. பால் குளிரூட்டும் நிலையம் நடத்துதல்.

*7- 279/6*

---

**மத்திய மாகாண மாகாண சபை**

கடுகண்ணாவ நகர சபை

**துணைவிதிகள்**

*(255 ஆவது அத்தியாயம் ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் ஆவது 6 (அ) உப பிரிவின் கீழ் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கடுகண்ணாவ நகர சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,*
*மத்திய மாகாணம்.*

*மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,*
*கண்டி,*
*2014, செத்தெம்பர் 15.*

விளையாட்டு மைதானங்கள் பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் கடுகண்ணாவ நகர சபையின் விளையாட்டு மைதானங்களைக் கட்டுப்படுத்துதல், மற்றும் கட்டணங்கள் அறவிடுதல் பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. இந்தத் துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள விளையாட்டு மைதானங்களைக் கட்டுப்படுத்துதல், முறைப்படுத்துதல் மற்றும் கட்டணம் அறவிடுதல் என்பவற்றுக்காக விதிக்கப்படுகின்றன.

3. கடுகண்ணாவ நகர சபைக்குச் சொந்தமான விளையாட்டு மைதானம் ஒன்றைப் பயன்படுத்தவென அனுமதிப்பத்திரத்தை வேண்டி நிற்கும் எவரேனும் ஒருவர் உரிய பிரதேச சபை தயாரித்துள்ள விண்ணப்பப்படிவத்தில் தலைவருக்கோ அல்லது தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலருக்கோ விண்ணப்பித்தல் வேண்டும்.

4. ஏதும் விசேட விழாக்களை நடத்துதல், விளையாட்டுப்போட்டிகள், கண்காட்சிகள், களியாட்ட விழாக்கள், கூட்டங்கள் அல்லது அவற்றுக்குச் சமமான ஏதும் ஒரு கருமத்துக்காகத் துணைவிதிகளின் முதலாம் அட்டவணைக்கு அமைய விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் குறைந்தது ஒரு வாரத்துக்கு முன்னரேனும் முன்வைக்கப்படுதல் வேண்டும்.

(அ) விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்தவென முன்வைக்கப்படும் விண்ணப்பங்கள் யாவும் அவை கிடைக்கப்பெற்ற ஒழுங்கின் கீழ் தலைவரால் பரிசீலிக்கப்படும். விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்தவென முன்வைக்கப்படும் ஒவ்வொரு வேண்டுகோளும் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய ஏற்றுக்கொள்ளப்படவோ அல்லது நிராகரிக்கப்படவோ முடியும். சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு பொருத்தமானவையெனக் கருதப்படும் நிபந்தனைகளை விதித்து அனுமதி வழங்கவும் முடியும் ;

(ஆ) விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்தவோ அல்லது அதனை மறுக்கவோ தலைவர் மேற்கொள்ளும் தீர்மானத்தைத் தாமதம் செய்யாது உடனடியாக விண்ணப்பதாரிக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும் ;

(இ) விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்த வழங்க முடியுமெனின், சபை காலத்துக்குக் காலம் தீர்மானித்து வர்த்தமானியில் வெளியிடும் கட்டணத்தையும், வைப்புத் தொகையையும் 05 நாட்களுக்கு முன்னர் செலுத்துமாறு விண்ணப்பதாரிக்கு அறிவித்தல் வேண்டும் ;

(ஈ) குறிப்பிட்டவாறு உரிய கட்டணத்தையும், வைப்புத்தொகையையும் விண்ணப்பதாரி தலைவர் குறிப்பிடும் கால எல்லைக்குள் செலுத்திவிட்டால், விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்தும் அனுமதிப்பத்திரத்தைக் குறித்த விண்ணப்பதாரிக்கு வழங்குதல் வேண்டும்.

5. மேலே துணைவிதிகளில் காட்டப்பட்டுள்ள கருமங்கள் அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்தத் தேவையான அனுமதிப்பத்திரத்தை வைத்திருந்தாலொழிய, எந்த நேரத்திலும், எந்தவொரு கருமத்துக்கும் விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்துவதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படக்கூடாது.

6. மீளளிப்புச் செய்தல் -

(அ) விளையாட்டு மைதானம் ஒதுக்கியதை இரத்துச் செய்யுமாறு ஒதுக்கப்பட்ட தினத்துக்கு ஆகக் குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னரேனும் எழுத்துமூல அறிவித்தல் தலைவருக்கு விடுக்கப்பட்டாலன்றி, எவ்வித கட்டணமும் அல்லது அதன் ஒரு பகுதியும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது ;

(ஆ) ஒதுக்கீடொன்றை இரத்துச் செய்யுமாறு தலைவருக்கு முறையாக விடுக்கப்படும் அறிவித்தல் அவருக்குக் கிடைத்தவுடன், செலுத்தப்பட்ட கட்டணத்திலிருந்து சபைக்கு ஏற்பட்ட செலவுகள் முழுவதும் கழிக்கப்பட்ட பின்னர் எஞ்சிய தொகை அல்லது முழுத்தொகையும் வைப்புக் கட்டணத்துடன் மீளளிப்புச் செய்யப்படலாம். எனினும், இரத்துச் செய்யப்பட்ட ஒதுக்கீடு காரணமாக வேறொரு விண்ணப்பதாரிக்கு விளையாட்டு மைதானத்தை வழங்குவது நிராகரிக்கப்பட்டால் பிணை வைப்புப் பணத்தைத் ஏனைய எந்த வைப்புப் பணமும் திருப்பிச் செலுத்தப்படக்கூடாது.

7. விளையாட்டு மைதானம் ஒதுக்கப்படும் நேரங்களும் கருமங்களும் -

(அ) வழங்கப்பட்ட கருமம் தவிந்த ஏனைய எந்தக் கருமத்துக்கும் விண்ணப்பதாரி மைதானத்தைப் பயன்படுத்துதல் கூடாது. அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்படும் நேரத்தில் மட்டுமே விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்த விண்ணப்பதாரிக்கு அனுமதி இருத்தல் வேண்டும் ;

(ஆ) அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லை முடிவடைந்த பின்னர், தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் மேலதிகமாகப் பயன்படுத்திய கால எல்லைக்கென இந்தத் துணைவிதியின் முதலாவது துணைவிதிக்கமைய குறித்துரைக்கப்பட்டுள்ள கட்டணங்களுக்கு மேலதிகமாகச் சபை தீர்மானித்து வெளியிடும் மேலதிகக் கட்டணத்தையும் செலுத்துவதற்கு உட்படுதல் வேண்டும்.

(இ) இந்தக் கட்டணத்தை அவரது வைப்புக் கட்டணத்திலிருந்து கழித்துக்கொள்ளல் வேண்டும். தலைவரால் முறையாக அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் கேட்கும்போது விண்ணப்பதாரி அனுமதிப்பத்திரத்தை முன்வைத்தல் வேண்டும். மேலும், இந்த அனுமதிப்பத்திரத்தை அலுவலரிடம் முன்வைக்காதவிடத்து, விண்ணப்பதாரிக்கு விளையாட்டு மைதானத்தைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட முடியாது.

8. மூன்றாவது துணை விதிக்கமைய தலைவரால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தில் அனுமதிப்பத்திரதாரி கைமாற்றம் செய்தல் கூடாது.

9. விண்ணப்பதாரி சபைக்குச் சொந்தமான சொத்துக்கள், உபகரணங்கள் என்பவற்றைப் பாதுகாத்து வைக்கக் கடமைப்பட்டுள்ளார். சொத்துக்களுக்கும் உபகரணங்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டால், அவற்றை இருந்தவாறு திருத்தியமைத்து மீளளித்தல் வேண்டும்.

10. 9 ஆவது துணைவிதியின் கீழ் செயற்படாதவிடத்து, தலைவரால் கணிக்கப்படும் சேதத்துக்குரிய தொகையை வைப்புத் தொகையிலிருந்து கழித்துக்கொள்ளும் அதிகாரம் சபைக்கு உண்டு.

11. அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் போது அனுமதிப்பத்திரதாரிக்கோ அல்லது ஏனையோருக்கோ ஏற்படும் சேதம் அல்லது நட்டம் தொடர்பாக நகர சபை பொறுப்பேற்க முடியாது.

12. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டு வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும், தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 (2) ஆவது பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

13. 12 ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்படும் தண்டத்தொகை நகர சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

14. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற்பதங்களின் விளக்கம் :-

"சபை" என்பது, கடுகண்ணாவ நகர சபையையும் ;

"தலைவர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரையும் ;

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும் குறிப்பிடும்.

15. இந்தத் துணைவிதிகளின் சிங்களம், தமிழ், ஆங்கில வாசகங்களிடையே ஏதும் கருத்து மயக்கம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

**கடுகண்ணாவ நகர சபை**

விளையாட்டு மைதானத்தை ஒதுக்கிக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்

விண்ணப்பிப்பவரது பெயர் :........................................................................ ..............................................................

முகவரி :..................................................................................................................................................

தொலைபேசி இலக்கம் :................................................................................................................................

ஒதுக்கம் செய்வதற்கான காரணம் :...................................................................................................................

தேவைப்படும் தினம் / தினங்கள் :..................................................................................................................

நேரம் :..........................................................................................................................................................

........................................................
கையொப்பம்.

திகதி :.............................

**அலுவலகப் பாவனைக்கு**

பரிந்துரை:

...............................................................................................................................................

...............................................................................................................................................

...............................................................................................................................................

கௌரவ தலைவர் அவர்களது அங்கீகாரம்

...............................................................................................................................................

...............................................................................................................................................

...............................................................................................................................................

பணக்கொடுப்பனவு :

| | | | |
|---|---|---|---|
| பற்றுச்சீட்டு இல. : | | திகதி : | |
| வைப்புத் தொகை : | | மொத்தம் : | |

**திறப்பு வழங்குதல் :**

| | | | |
|---|---|---|---|
| திகதி : | | மீளளிப்புத் திகதி : | |

7- 279/7

---

**மத்திய மாகாண மாகாண சபை**

கடுகண்ணாவ நகர சபை

**துணைவிதிகள்**

(255 ஆவது அத்தியாயம்) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் 11 உப பிரிவின் கீழ் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கடுகண்ணாவ நகர சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2014, செத்தெம்பர் 15.

சந்தைகள் தொடர்பான துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் சந்தைகள் நடத்துதல், கட்டுப்படுத்துதல், கட்டணங்கள் அறவிடுதல் பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. இந்தத் துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் சந்தைகளை நடத்துதல், கட்டுப்படுத்துதல் மற்றும் நெறிப்படுத்துதல் என்பவற்றுக்காக விதிக்கப்படுகின்றன.

3. சந்தையொன்றை நடத்துவதற்கெனக் குறித்துரைக்கப்படும் இடத்தில் எவரேனும் ஒருவர் தலைவரால் வழங்கப்படும் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தின் மீதல்லாது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுதல் கூடாது.

4. நகர சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் குறிக்கப்படும் தினத்தில் மட்டுமே சந்தையை நடத்துதல் வேண்டும். எனினும் விசேட விழாக்காலங்களின் போது மக்களின் தேவைப்பாடுகளுக்கெனவும், மன நிறைவுக்கெனவும் விசேட சந்தைகளை நடத்துவதற்கு நகர சபைக்கு அதிகாரமுண்டு. குறித்த சந்தைகள் பகற்காலங்களிலாயின், முற்பகல், 6.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணிவரையும், இரவுக் காலங்களிலாயின், பிற்பகல் 6.00 மணி முதல் முற்பகல் 6.00 மணிவரை செயற்பட முடியும்.

5. நகர சபையில் பிரேரணையொன்றை நிறைவேற்றுவதன் மூலம் தீர்மானிக்கப்படும் கட்டணமொன்றைச் சந்தைக் கட்டணமாகப் பிரதேசத்துக்குள் வியாபாரம் செய்வோரிடமிருந்து அறவிட முடியும். மேலும், குறித்த கட்டணத்தைச் செலுத்த வியாபாரிகள் கடமைப்படுதல் வேண்டும்.

6. நான்காவது துணைவிதிக்கமைய செயற்படாதவர்களை உரிய சந்தைப் பிரதேசத்திலிருந்து அகற்றிவிட நகர சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

7. சந்தைப் பிரதேசத்துக்குள் வியாபாரம் செய்வோர் முறைகேடான வகையில் நடந்து கொள்ளுதல் கூடாது. எவ்வேளையிலும் நாகரிகமாகவும், நட்புணர்வுடனும் நடந்துகொள்ளுதல் வேண்டும்.

8. சந்தைப் பிரதேசத்துக்குள் குடிபோதையில் இருப்பது முற்றிலும் தடை செய்யப்படல் வேண்டும்.

9. சந்தைச் சூழலில் வியாபாரம் செய்வோர் தாம் அகற்றும் தேவையற்ற கழிவுப் பொருட்களைச் சுற்றாடலுக்கும், ஏனைய பிரிவினருக்கும் கேடு விளைவிக்காத வகையில் சபை குறிப்பிடும் இடத்தில் இட்டு வைத்தல் வேண்டும்.

10. சந்தைப் பிரதேசத்தில் சந்தைக் கட்டணத்தை அறவிடுவதற்கெனச் சபை தீர்மானிக்கும் ஒருவரைச் சாட்டுதல் செய்வதற்குச் சபைக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும்.

11. சந்தையின் வியாபார நடவடிக்கைகளைப் பரிசோதிக்கவும், கண்காணிக்கவும் எனத் தலைவர் அலுவலர்களையும், பணியாட்களையும் நியமிக்க முடியும். அவர்களுக்குப் பின்வரும் அம்சங்களைப் பரிசீலிக்க அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(அ) வியாபாரம் செய்வதற்கென உரிய அனுமதிப்பத்திரம் பெறப்பட்டுள்ளதா என்பது ;

(ஆ) சரியான மற்றும் அனுமதிக்கப்பட்ட நிறுத்தல், அளத்தல் உபகரணங்கள் பாவிக்கப்படுகின்றவா என்பது ;

(இ) சுகாதாரமான முறையில் பண்டங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டு உள்ளனவா என்பது ;

(ஈ) விற்கப்படும் பண்டங்கள் நுகர்வோருக்கான பொருத்தமான தர நிர்ணயங்களுடன் உள்ளனவா என்பது.

12. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டு வரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும் முறையே நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆவது அதிகாரத்தின் 153 (2) ஆவது பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

13. 12 ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்படும் தண்டத்தொகை நகர சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

14. சபையிடமிருந்து பெறப்படும் அனுமதிப்பத்திரத்தின்மீது மட்டுமே வார சந்தைப்பகுதியில் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் அல்லாது மீன் வைத்திருப்பதும், விற்பனை செய்வதும் கூடாது.

15. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற்பதங்களின் விளக்கம் :-

"சபை" என்பது, கடுகண்ணாவ நகர சபையையும் ;

"தலைவர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரையும் ;

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும் ,

"சந்தை வளவு" என்பது, நகர சபை குறித்துரைத்துத் தீர்மானிக்கும் பிரதேசத்தையும் ,
குறிக்கும்.

16. இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏதும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

7- 279/8

---

**மத்திய மாகாண மாகாண சபை**

கடுகண்ணாவ நகர சபை

**துணைவிதிகள்**

(255 ஆவது அத்தியாயம் ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் ஆவது 9 (எ) உப பிரிவின் கீழ் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கடுகண்ணாவ நகர சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2014, செத்தெம்பர் 15.

சிகை அலங்கார நிலையங்கள், முடி திருத்தும் நிலையங்கள் மற்றும் அழகுக்கலை
நிலையங்கள் பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் சிகை அலங்கார நிலையங்கள், முடி திருத்தும் நிலையங்கள் மற்றும் அழகுக்கலை நிலையங்கள் என்பவற்றை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.

*2.* இந்தத் துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் சிகை அலங்கார நிலையங்கள், முடி திருத்தும் நிலையங்கள் மற்றும் அழகுக்கலை நிலையங்களை முறைப்படுத்தவும், மேற்பார்வை செய்யவும், கட்டுப்படுத்தவும் என விதிக்கப்படுகின்றன.

*3.* கடுகண்ணாவ நகர சபையின் தலைவரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் கீழ் அல்லாது, சிகை அலங்கார நிலையத்தையும், முடி திருத்தும் நிலையத்தையும், அழகுக்கலை நிலையத்தையும் எவரும் நடத்துதல் கூடாது.

*4.* மூன்றாவது துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஏற்கனவே தலைவரால் இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எந்த வருடத்துக்கென வழங்கப்படுகின்றதோ, அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைதல் வேண்டும்.

5. (அ) இந்தத் துணைவிதிகளின் (அ) மற்றும் (ஈ) பந்திகளின் நியமங்களுக்கமைய அவை நிறைவு செய்யப்பட்டாலன்றி, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரால் சிகை அலங்கார நிலையம், முடி திருத்தும் நிலையம் அல்லது அழகுக்கலை நிலையத்துக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட முடியாது ;

(ஆ) சிகை அலங்கார நிலையம், முடி திருத்தும் நிலையம், மற்றும் அழகுக்கலை நிலையம் என்பவற்றை நடத்திச் செல்ல உத்தேசித்துள்ள கட்டடம் அல்லது கட்டடத்தின் பகுதி.

I. உறுதியாகக் கட்டப்படும், ஒருவருக்குச் சேவையை வழங்குவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடவசதி ஆகக் குறைந்தது 1.5 சதுர மீற்றருக்குக் குறையாதும், ஒரே நேரத்தில் சேவையைப் பெறுவோரது எண்ணிக்கைக்குச் சமமான அளவு இடவசதியும் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

II. சேவையைப் பெறும் நோக்குடன் வருகைதரும் ஒருவருக்கு, சேவையைப் பெற்றுக்கொண்டிருப்பவர் அமர்ந்திருக்கும் இடத்திலிருந்து குறைந்தது 1.5 மீற்றர் தூர இடைவெளி இருக்கும் வண்ணம் அமர்ந்திருக்கப் போதிய இடவசதி இருத்தல் வேண்டும்.

III. உட்சுவர் உறுதியான கட்டடப்பொருளினால் ஆக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதன் மீது பெயின்ட் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

IV. உட்கூரை அரிமரத்தினாலோ அல்லது உறுதியான பொருளினாலோ அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தரை மட்டத்திலிருந்து குறைந்தது 2.25 மீற்றர் உயரத்துக்கு சீலிங் அமைக்கப்பட்டும், சீலிங் வெள்ளை நிறத்தில் பெயின்ட் செய்யப்பட்டும் இருத்தல் வேண்டும்.

V. உட்தரை சிமெந்தினால் பூசப்பட்டதாகவோ அல்லது பீங்கான் ஓடுகள் பதிக்கப்பட்டதாகவோ இருத்தல் வேண்டும். சுவர்களும் அவை தரையைத் தொடும் இடங்களும் இலகுவில் சுத்தம் செய்யக்கூடிய வகையில் வட்ட வடிவைக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

VI. உட்பகுதி வளி சீராக்கம் செய்யப்படாத கட்டடமாக இருப்பின், அதன் பரப்பளவின் பதினைந்தில் ஒன்றுக்குக் குறையாத அளவில் காற்று வழி பொருத்தப்பட்டும் போதுமான அளவில் வெளிச்சம் கிடைக்கும் வண்ணமும் வசதிகள் காணப்படுதல் வேண்டும்.

VII. உட்பகுதி வளி சீராக்கம் செய்யப்பட்டிருப்பின், போதுமான அளவு மின்னொளி வழங்கப்படுதல் வேண்டும்.

VIII. சேவை பெறுநர்களுக்குச் சேவையை வழங்கும்போது கழுவுவதற்கென நீர் பயன்படுத்தப்படுமெனின், அதற்கெனக் கழுவும் பேசின்கள் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பயன்படுத்திய அசுத்த நீர் வடிந்தோடுவதற்காகப் போதுமான அளவு குழாய்களும் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

IX. உட்பகுதியில் பயன்படுத்திய அசுத்த நீரை உறிஞ்செடுக்கக்கூடிய குழியொன்றில் வடிந்தோடச் செய்வதுடன், பொது நீர் வடிந்தோடும் இடங்களுக்கு அதனைத் திருப்பிவிடுதல் கூடாது.

X. உட்பகுதியில் அல்லது அருகில் நீர் முத்திரையிட்ட மலசலகூட வசதி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

XI. உட்பகுதியை வீட்டுக் கருமங்களுக்கெனப் பயன்படுத்தக்கூடாது. வீட்டுக்கெனப் பயன்படுத்தும் பகுதியிலிருந்து இது வேறாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ)சிகை அலங்கார நிலையம், முடி திருத்தும் நிலையம் மற்றும் அழகுக்கலை நிலையங்கள்.

I. சேவை பெறுநர்களுக்கெனத் திறந்து வைக்கப்பட்டுள்ள எல்லா நேரங்களிலும் போதிய அளவு நீர்வசதி வழங்கப்படுதல்.

II. நடத்திச் செல்லும்போது பயன்படுத்தப்படும் கருவிகள், உபகரணங்கள் என்பவற்றை கிருமியழிப்புச் செய்வதற்கென நீரைக் கொதிக்கச் செய்யும் வசதி, அல்லது கிருமியழிப்பு முறை மற்றும் கிருமியழிப்புக்கான பாத்திரங்கள் போதிய அளவு இருத்தல்.

III. உட்பகுதியில் சேவை வழங்குவோருக்கு அவர்களது கைகளைக் கழுவுவதற்கான பேசின், சவர்க்காரம் அல்லது திரவச் சவர்க்கார வசதிகள் இருத்தல்.

IV. பயனாளிகளது பயன்பாட்டுக்கென வெண்ணிறத் துவாய்கள், இடையின் மேற்பகுதியை மறைக்கும் துணி என்பன போதுமான அளவு இருத்தல்.

V. உட்புறத்தில் வெட்டப்படும் தலைமயிர் மற்றும் கழிவுகளை இட்டு வைப்பதற்காக இடத்துக்கிடம் கொண்டு செல்லக்கூடிய நன்கு மூடப்பட்டுள்ள கொள்கலன்கள் இருத்தல்.

VI. உட்புறத்தில் மின்சாரத்தால் இயங்கும் உபகரணங்கள் பயன்படுத்தப்படுமெனின், ஒரு பயனாளியின் மேசைக்கு ஒன்று எனப் போதிய அளவு பாதுகாப்பு மின்கடத்திகள் பொருத்தப்பட்டிருத்தல்.

VII. தலைவரால் விதிக்கப்படும் வகையில் போதியளவு மருந்துகள், முதலுதவிப் பொருட்கள் என்பவற்றைக் கொண்டுள்ள முதலுதவிப் பெட்டி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. இந்தப் பிரிவின் துணைவிதிகளுக்கமைய அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொரு நிலையத்திலும், பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒவ்வொருவரும் தலைவரால் பரிந்துரைக்கப்பட்ட அளவில் முதலுதவிப் பயிற்சியும், குறைந்தது வருடத்தில் ஒரு தடவையேனும் முதலுதவி ஒத்திகையும் வழங்கப்படுதல் வேண்டும்.

7. இந்தத் துணைவிதிகளின்கீழ் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் நான்காவது துணைவிதியின் (ஆ) பிரிவின் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பெயின்ட் செய்யப்பட வேண்டுமென விதிக்கப்பட்ட இடங்களில் ஒரு வருடத்தில் குறைந்தது ஒரு தடவையேனும் பெயின்ட் பூசுதல் வேண்டும்.

8. இந்தத் துணை விதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறும் ஒவ்வொருவரும் அனுமதிப்பத்திர இடத்தின் தரையை வாரத்தில் குறைந்தது ஒரு தடவையேனும் கிருமிகொல்லிகள் கொண்டு கழுவிச் சுத்தம் செய்தல் வேண்டும்.

9. இந்தத் துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட ஒரு இடத்தைப் பகற் காலங்களில் அல்லது இரவு காலங்களில் உணவு உண்ணும் இடமாகப் பயன்படுத்துதலும், வேறெவருக்கும் அவ்வாறு பயன்படுத்த இடமளித்தலும் கூடாது.

10. இந்தத் துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட ஒரு இடத்தினுள் உணவு சமைத்தல் அல்லது உணவு விற்பனை செய்தல், விற்பனைக்காகக் காட்சிப்படுத்துதல் என்பன செய்தல் கூடாது.

(அ) ஏதும் ஒட்டு நோயினால் அல்லது சரும நோயினால் பீடிக்கப்பட்ட அல்லது அண்மையில் அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்ட எவரும் அல்லது அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவரைப் பராமரிப்புச் செய்துவரும் எவரும், அவ்வாறான நோய் பரவும் கால எல்லை முடிவடைந்திருந்தாலன்றி, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எந்தவொரு இடத்திலும் அவ்வாறான எவரையும், எவ்விதத்திலேனும் , எக்கருமத்திலேனும் ஈடுபடுத்துவதோ அல்லது எவரதும் உதவியாளராக ஈடுபடுத்துவதோ, அல்லது ஈடுபடுத்தச் செய்வதோ, ஈடுபட இடமளிப்பதோ கூடாது ;

(ஆ) நன்கு கழுவப்பட்ட, தூய்மையான உடைகள் அணிந்திருந்தாலன்றி, அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட ஒரு இடத்தில் எவரையும் எவ்விதக் கருமத்திலும் ஈடுபடுத்துதல் அல்லது ஈடுபட இடமளித்தல் கூடாது ;

(இ) அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியாட்கள் அனைவரையும் குறைந்தது வருடத்தில் ஒரு தடவையேனும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துவது அனுமதிப்பத்திரதாரியின் கடமையாகும் ;

11. எவ்விதமான நோயினாலும் அல்லது ஒட்டு நோயினால் சரும நோயினால், பீடிக்கப்பட்டுள்ள அல்லது அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவருக்கு அண்மையில் பரிகார உதவி செய்த ஒரு பயனாளிக்குச் சேவையை வழங்கிய பின்னர்,

(அ) குறித்த சேவையை வழங்கியவர் கிருமிநாசினிகளைக் கொண்டு தமது கைகளைச் சுத்தம் செய்துகொண்டாலன்றி, இன்னுமொரு பயனாளிக்குச் சேவையை வழங்குதல் அல்லது சேவையை வழங்கச் செய்தல் கூடாது ;

(ஆ) குறித்த பயனாளிக்கெனப் பயன்படுத்திய எவ்விதமான உபகரணத்தையும் தொற்று நீக்கம் செய்தபின் அல்லாது, பயன்படுத்திய துவாய், மறைப்புத் துணி என்பவற்றைக் கிருமியழிப்புச் செய்து சவர்க்காரமிட்டுத் துவைத்த பின்னர் அல்லாது வேறு எவருக்கேனும் அவற்றைப் பயன்படுத்துவதும், பயன்படுத்த இடமளிப்பதும் கூடாது.

12. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பணியாற்ற வைத்துள்ள ஒவ்வொரு பணியாளரும்,

(அ) நாளாந்தம் நீராடிய பின்னர் அல்லது உடலைக் கழுவிய பின்னரே சேவையில் ஈடுபடுகின்றாரா என்பதையும் ;

(ஆ) அணிந்திருக்கும் உடைகளும் அணிகலங்களும் சுகாதாரமான நிலையில் உள்ளனவா என்பதையும் ;

(இ) நகங்களைக் குறுக வெட்டி, அழுக்கில்லாது வைத்துள்ளாரா என்பதையும் ;

(ஈ) ஒவ்வொரு பயனாளிக்கும் சேவையை வழங்கிய பின்னர் சவர்க்காரமிட்டுக் கைகளைக் கழுவிக்கொள்கின்றாரா என்பதையும்.

உறுதிப்படுத்திக்கொள்வது அனுமதிப்பத்திரதாரியின் கடமையாகும்.

13. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பயன்படுத்தும்,

(அ) உபகரணங்கள் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு தடவையும் அவற்றைத் தொற்று நீக்கம் செய்வது ;

(ஆ) தூரிகைகளையும் சீப்புகளையும் பயன்படுத்த முன்னர் நாளாந்தம் நன்கு கழுவிச் சுத்தம் செய்து தொற்று நீக்கம் செய்யப்படுவது ;

(இ) அனைத்து கத்தரிக்கோல்களும், கோப்பைகளும், சவர்க்காரம், தூரிகை என்பவற்றைப் பயன்படுத்தும் ஒவ்வொரு தடவையும் கொதிநீரில் இட்டுக் கழுவி எடுத்தல்;

என்பதை அனுமதிப்பத்திரதாரி உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

14. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பயன்பெறும் ஒவ்வொரு பயனாளியினதும்,

(அ) தலைமயிர் அல்லது மீசையை வெட்டி அகற்றும் மயிர்த்துகள்கள் அல்லது ஏனைய கழிவுகளைக் கூட்டிப் பெருக்குவதன் மூலம் அல்லது மின்சாரத்தில் இயங்கும் உறிஞ்செடுக்கக்கூடிய இயந்திரத்தினால் சேகரித்து அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் இட்டு வருகின்றாரா என்பதையும் ;

(ஆ) தலைமயிரை அல்லது மீசையை வெட்டப் பயன்படுத்தும் சவர அலகு, மாற்றக்கூடிய சவரக் கத்தியின் அலகு என்பவற்றை மாற்றி விடுகின்றாரா என்பதையும் ;

அனுமதிப்பத்திரதாரி உறுதி செய்துகொள்ளல் வேண்டும்.

15. நாளாந்த நடவடிக்கைகளின் இறுதியில், அல்லது தேவைக்கேற்றவாறு நாளாந்தம் ஓரிரு தடவையேனும், கொள்கலன்களில் சேகரிக்கப்பட்ட மயிர்த்துகள்களைக் கொண்ட கழிவுகளைத் தரைமட்டத்திலிருந்து குறைந்தது ஒரு மீற்றர் ஆழத்திலேனும் புதைத்துவிட ஏற்பாடு செய்வது அனுமதிப்பத்திரதாரியின் கடமையாகும். மேலும், கழிக்கப்படும் மயிர்த்துகள்கள் அல்லது கழிவுகள் காற்றில் பறந்து செல்லாது அல்லது சுற்றாடலில் அல்லது பொது இடங்களில் விசிறிச் செல்ல விடாது பார்த்துக்கொள்வது அனுமதிப்பத்திரதாரியின் கடமையாகும்.

16. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் சேரும் மயிர்த்துகள்கள், கழிவுகள் என்பவற்றை15 ஆவது துணைவிதியின் ஏற்பாடுகளுக்கமைய அகற்றச் செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் கடுகண்ணாவ நகர சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் விதிக்கப்படும் வகையில் நகர சபையின் கழிவுப் பொருட்கள் சேகரிக்கும் வாகனத்திடம் கையளிக்க ஏற்பாடு செய்தல் வேண்டும்.

17. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில் பயன்படுத்தப்படும் கழிவுப்பொருள் சேகரிக்கும் கொள்கலனை வெறுமையாக்கிய பின்னர் அதனைத் தொற்று நீக்கம் செய்து சுத்தப்படுத்தச் செய்தல் அனுமதிப்பத்திரதாரியின் கடமையாகும்.

18. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எந்தவொரு இடத்திலும்,

(அ) எவ்விதத்திலேனும் குருதிப் பெருக்கைத் தடுக்கும் பென்சிலையும், அல்லது பவுடர் பூசும் பூவையும் அல்லது எந்தவொரு பொருளையும் ;

(ஆ) ஏதேனும் குருதிப் பெருக்கைத் தடுக்கும் சீனக்காரம் அல்லது ஏனைய எந்தப் பொருளையும், அது தூளாகவோ திரவமாகவோ உள்ள நிலையில் பயனாளியைத் தவிர, ஏனைய எவரும் பயன்படுத்துவது அல்லது பயன்படுத்த விடுவது கூடாது.

19. அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட எந்தவொரு இடத்திலும் சுத்தமான நிலையில் இல்லாத மேல் மறைப்புத் துணி அல்லது, கழுவியதன் பின்னர் முதற் தடவையாகப் பயன்படுத்தும் துவாய் அல்லாத துவாயை எந்தவொரு பயனாளியின் பயன்பாட்டுக்கும் எடுத்தல் கூடாது.

20. இந்தத் துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் பெறப்பட்ட இடத்தில், அதில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்களன்றி வேறெந்தக் கருமங்களையும் கடுகண்ணாவ நகர சபையின் தலைவரது எழுத்துமூல அனுமதியின்றிச் செய்தல் கூடாது.

21. தலைவர் அல்லது எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்ட, நகர சபையில் எவரேனும் அலுவலரால் இந்தத் துணைவிதிகளில் குறிக்கப்பட்ட இடத்தை நியாயமான எந்த வேளையிலும் உட்புகுந்து அதனைப் பரிசோதிப்பது சட்டபூர்வமானதாக அமையும். தலைவருக்கோ அல்லது அவ்வாறான அலுவலருக்கோ தேவைப்படும் அனைத்து உதவிகளையும் வழங்குதல் வேண்டும்.

22. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற் பதங்களின் விளக்கம் :

"சபை" என்பது, கடுகண்ணாவ நகர சபையையும் ;

"தலைவர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரையும் ;

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும் ,

"மேல் மறைப்புத்துணி" என்பது, அனுமதி பெற்ற நிலையத்தில் சேவையை நாடி வரும் எவரதும் உடலின் மேற்பகுதியை மறைக்கப்பயன்படுத்தும் மறைப்புத்துணி எனவும் கருதப்படும்.

23. இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏதும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

7- 279/9

**மத்திய மாகாண மாகாண சபை**

கடுகண்ணாவ நகர சபை

**துணைவிதிகள்**

(255 ஆவது அத்தியாயம் ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் 7 (ஈ) உப பிரிவின் கீழ் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கடுகண்ணாவ நகர சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2014, செத்தெம்பர் 15.

நகரினுள் அலங்கரிப்பு செய்வதை முறைப்படுத்துவது தொடர்பான துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் அலங்கரிப்பு செய்வதை முறைப்படுத்தும், கட்டுப்படுத்தும் மற்றும் கட்டணம் அறவிடுவது தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. கடுகண்ணாவ நகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள வீதிகளில் பொதுமக்களால் மேற்கொள்ளப்படும் அலங்கரிப்புகளை முறைப்படுத்துவதற்கென இந்தத் துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

3. இந்தத் துணைவிதிகளுக்கமைய கடுகண்ணாவ நகர சபையின் தலைவரிடமிருந்து பெறப்பட்ட எழுத்துமூல அனுமதியின்றிச் சபையின் நிர்வாக எல்லைக்குள் எந்தவொரு இடத்திலும் அலங்கரிப்பு செய்வது சட்டபூர்வமானது அல்ல.

4. இதன் பின்னர் மேற்குறித்த கடுகண்ணாவ நகர சபைத் தலைவர் அல்லது அவரது அங்கீகாரம்பெற்ற அலுவலரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றி எவரும் கடுகண்ணாவ நகர சபை நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள வீதிகளிலும், பொது இடங்களிலும் அலங்கரிப்புச் செய்தல் கூடாது.

5. எந்தவொரு அலங்கரிப்புக்குமென அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும்போது இந்தத் துணைவிதிகளின் 06 ஆவது துணைவிதிக்கு அமைய அலங்கரிப்பு செய்வதற்குக் குறைந்தது 48 மணி நேர அவகாசத்துக்கு முன்னர் விண்ணப்பப்படிவமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. அலங்கரிப்பு மேற்கொள்ளும் வீதி அல்லது பொது இடத்தின் பெயர்.

அலங்கரிப்பின் தன்மை :

அலங்கரிப்பு செய்யும் கால எல்லை:

அலங்கரிப்பு எதற்கெனச் செய்யப்படுகின்றது.

அலங்கரிப்பை அகற்றிவிடும் திகதி :

அகற்றப்படும் பொருட்கள் எவ்வாறு நீக்கப்படும் என்ற விபரம் :

7. விண்ணப்பப்படிவம் கையளிக்கப்பட்ட பின்னர் அலங்கரிப்புக்கென இந்தத் துணைவிதிகளின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

8. அலங்கரிப்புக்கென எவ்வகையிலேனும் பொலித்தீன் பயன்படுத்தப்படுதல் கூடாது.

9. இந்தத் துணைவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்தின் மீதும் 500.00 ரூபாஅனுமதிப்பத்திரக் கட்டணமாக அறவிடப்படும்.

(அ) இந்தத் துணைவிதிகளுக்கமைய ஒவ்வொரு அலங்கரிப்புக் கருமத்தின் பேரிலும், 5,000 ரூபா இற்கான தொகையொன்றைச் சபையிடம் வைப்புச் செய்தல் வேண்டும் ;

(ஆ) அனுமதிப்பத்திரம் பெற்ற எவரேனும் ஒருவர் மேற்கொள்ளும் அலங்கரிப்பை, அனுமதிப்பத்திரத்தில் அதனை அகற்றுவதற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தின் 24 மணி நேரத்துக்குள் அகற்றவில்லையெனின், சபையின் மூலம் அது அகற்றப்பட்டு, அதற்கெனச் செலவிடப்பட்ட தொகையை அறவிட்ட பின்னர் ஏதும் பணம் எஞ்சியிருப்பின், அதனை வைப்பாளரிடம் மீளளிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.

10. 9 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் மரண ஊர்வல அலங்கரிப்புக்குப் பொருந்தாது.

11. இந்தத் துணைவிதிகளுக்கமைய மேற்கொள்ளப்படும் அலங்கரிப்புக்கள் பிரதேசத்தின் வீதிச் சமிக்ஞைப் பலகைகள், பிரதேசத்தின் வரைபடங்கள், பெயர்ப்பலகைகள் என்பவற்றை மறைக்கும் விதத்திலோ அல்லது அவற்றைத் தடை செய்யும் விதத்திலோ மேற்கொள்ளப்படுதல் கூடாது.

12. இந்தத் துணை விதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அத்தியாயம்) 153 ஆம் பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

13. 12 ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்படும் தண்டத் தொகை நகர சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

14. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற்பதங்களின் விளக்கம் :-

"சபை" என்பது, கடுகண்ணாவ நகர சபையையும் ;

"தலைவர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரையும் ;

"அலங்கரிப்பு " என்பது, ஏதும் சம்பவத்தை அல்லது கருமத்தை நோக்காகக் கொண்டு செயற்கையான அல்லது இயற்கையான பொருட்களைக் கொண்டு குறித்த சம்பவம் அல்லது கருமத்தைப் பிரதி நிதித்துவப்படுத்துவதற்கெனத் தற்காலிகமாக மேற்கொள்ளப்படும் வழிமுறை எனவும்,

"அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையில் பணிபுரியும் ஒரு அலுவலரையும், குறிப்பிடும்.

இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏதும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

7- 279/10

**மத்திய மாகாண மாகாண சபை**

கடுகண்ணாவ நகர சபை

**துணைவிதிகள்**

(255 ஆவது அத்தியாயம் ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் 9 (எ) உப பிரிவின் கீழ் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கடுகண்ணாவ நகர சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம் .

மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2014, செத்தெம்பர் 15.

பொது மல கூடங்களைப் பயன்படுத்துதலை முறைப்படுத்துவதற்கான துணைவிதிகள்

1. இந்தத் துணை விதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் பொது மலகூடங்களின் பாவனையை முறைப்படுத்தும், கட்டுப்படுத்தும் துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. கடுகண்ணாவ நகர சபை நிர்வாக எல்லைக்குள் மக்களுக்குச் சுத்தமான, சுகாதாரமான பயன்பாட்டுக்கெனப் பொது மலகூடத் தொகுதிகளை முறைப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் இந்தத் துணைவிதிகள் விதிக்கப்படுகின்றன.

3. பொது மலகூடமொன்றினுள் மலம் கழிக்கும்போது எவரும் மலகூடத்தின் தட்டில் அல்லாது வேறெந்த இடத்திலும் மலங்கழித்தல் கூடாது என்பதுடன், சிறுநீர் கழிக்கும்போது மலகூடத்தில் அல்லது அதற்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இடத்தில் அல்லாது வேறெந்த இடத்திலும் சிறுநீர் கழித்தல் கூடாது.

4. மலகூடத்தில் உள்ள நீரை மலகூடச் செயற்பாடுகளுக்கன்றி வேறெந்த வேலைகளுக்கும் எவரும் பயன்படுத்துதல் கூடாது.

5. பொது மலகூடத்தில் அல்லது அதனுடன் தொடர்புள்ள மலகூடத் தட்டுக்கள் அல்லது வடிகானுக்கு உள்ளே அல்லது ஏனைய திறந்த இடங்களில் செங்கல், மண், கல், சாம்பல் அல்லது வடிகானில் தடையேற்படும் எந்தப் பொருளையும் இடுதல் அல்லது வைத்தல் கூடாது.

6. பொது மலகூடத்தின் திருத்த வேலையின்போது அல்லாது, மலகூடத் தட்டில், குழாயில், கபாடத்தில், தாங்கியில் அல்லது ஏனைய பொருத்துக்கள், அவை பொருத்தப்பட்டுள்ள முறை, அமைப்பு அல்லது ஒழுங்கு என்பவற்றை எவரும் சேதப்படுத்துதல், அகற்றுதல் தடை செய்தல் அல்லது எவ்வகையிலேனும் மாற்றியமைத்தல் கூடாது.

7. பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பொது மலகூடங்களில் பெண்களும், ஆண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள மலகூடங்களில் ஆண்களும் மாத்திரமே நுழைதல் வேண்டும். மலகூடங்களைச் சுத்தப்படுத்தும்போதும், அவற்றில் திருத்த வேலைகளை மேற்கொள்ளும் போதும், கதவுகள் மூடப்பட்டு, நுழைவாயில்களில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உரிய கருமங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளோர் எழுதி வைத்தல் வேண்டும்.

8. நகருக்குள் மலகூடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் எவரும் மலம் கழிக்கவோ அல்லது சிறுநீர் கழிக்கவோ கூடாது.

9. பொது மலகூடத்தின் கண்காணிப்பாளர், காவலர், ஊழியர் அல்லது பொறுப்பாளர் தமது கடமை நேரத்தின்போது எவருக்கேனும் செய்யும் அறிவிப்பு, சட்டபூர்வமானதாக அமையும், அவ்வாறான அறிவித்தலைத் தட்டிக் கழிப்பது, அதற்குத் தடையாக இருப்பது கூடாது.

10. பொது மலகூடங்கள் சிறுநீர் கழிக்கவும் மலங்கழிக்கவும் மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டும். அங்கு புகைபிடித்தல், மதுபானம் அருந்துதல் கூடாது காரணமின்றித் தங்கியிருத்தலும் கூடாது.

11. பொது மலகூடங்களின் பராமரிப்பு, பொறுப்பு என்பன தனியார் துறையினருக்குச் சாட்டுதல் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், சாட்டப்பட்டவர் நாளாந்தம் மலசலக்கூடங்களைக் கழுவிச் சுத்தம் செய்து வைத்திருத்தல் வேண்டும். மலசலக்கூடத்தின் பராமரிப்புக் கருமங்களுக்கெனக் கட்டணம் அறவிடப்படுமெனின், உரிய கட்டணத்தை அறிவித்தல் மூலம் நுழைவதற்கு முன்னர் காட்சிப்படுத்தல் வேண்டும்.

12. மலகூடத்தைச் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் எப்போதும் வைத்திருத்தல் வேண்டும். நாளாந்தம் கிருமிநாசினி இட்டுச் சுத்தம் செய்து நல்ல நிலையில் பராமரித்து வருதல் வேண்டும்.

13. பொது மலகூடத்தைத் தனியார் ஒருவருக்கோ அல்லது ஏதுமொரு நிறுவனத்துக்கோ சாட்டப்பட்டுள்ள வேளைகளில், பயன்படுத்துவோரிடமிருந்து அறவிடப்படவேண்டிய கட்டணத்தைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும். அவ்வாறான கட்டணத்தை மாத்திரமே அவர் மலசலக்கூடத்தைப் பயன்படுத்துவோரிடமிருந்து அறவிடுதல் வேண்டும்.

14. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அத்தியாயம்) 153 (2) ஆவது பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

15. 14 ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்படும் தண்டத்தொகை நகர சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

16. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற்பதங்களின் விளக்கம்:

"சபை" என்பது, கடுகண்ணாவ நகர சபையையும் ;

"தலைவர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரையும் ;

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும்,

குறிக்கும்.

17. இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏதும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

7- 279/11

மத்திய மாகாண மாகாண சபை

கடுகண்ணாவ நகர சபை

**துணைவிதிகள்**

(255 ஆவது அத்தியாயம் ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் 8 (இ) உப பிரிவின் கீழ் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கடுகண்ணாவ நகர சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
2014, செத்தெம்பர் 15.

தனியார் கற்றல் நிறுவனங்களை முகாமை செய்தல், முறைப்படுத்துதல் மற்றும் கட்டணம்
அறவிடுதல் பற்றிய துணைவிதிகள்

1. கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் தனியார் கற்றல் நிறுவனங்களை நடத்திச் செல்லும், அவற்றின் பொறுப்பாளராக இருக்கும் அல்லது முகாமை செய்பவராக இருக்கும் அனைவரும் அவற்றைச் சுத்தமாகவும் புனிதமாகவும் வைத்திருப்பது, அவற்றில் காற்றோட்ட வசதிகளை ஏற்படுத்துவது, அவற்றில் கிருமியழித்தல் செய்வது, பீடைகளைக் கட்டுப்படுத்துவது, முகாமை செய்வது மற்றும் கட்டணம் அறவிடுவது பற்றிய துணைவிதிகள் என இவை அழைக்கப்படும்.

2. இந்தத் துணைவிதிகள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டவையென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் அறிவித்தலாகப் பிரகடனப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து செயற்பாட்டுக்கு வரும்.

3. கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள தனியார் கற்றல் நிறுவனங்களது அனைத்து உரிமையாளர்களும், பொறுப்பாளர்களும் நடத்திச் செல்பவர்களும், தலைவரால் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இன்றித் தனியார் கற்றல் நிறுவனமொன்றை நடத்திச் செல்லக்கூடாது.

4. மூன்றாவது துணைவிதியின் கீழ் அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெறுவதற்கென இந்தத் துணைவிதிகளின் அட்டவணை I இல் தரப்பட்டுள்ள மாதிரிக்கமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன், பின்வரும் ஆவணங்களையும் தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

I. உரிய கட்டடத்தின் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம்
II. உள்ளகக் கட்டமைப்பு
III. பயன்படுத்தும் தொழில்நுட்ப உபகரணங்கள் பற்றிய விவரங்கள்.

5. 3 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவென அனுமதிப்பத்திரக் கட்டணமாக 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம் ) 165 அ பிரிவுக்கமைய, குறித்த இடத்தின் வருடாந்தப் பெறுமதியைக் கொண்டு சபை தீர்மானிக்கும் கட்டணமொன்று அறவிடப்படும்.

6. மூன்றாவது துணைவிதியின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எந்த வருடத்துக்கென வழங்கப்படுகின்றதோ, அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் அது முடிவடையும்.

7. விரிவுரைக் கட்டடத்தின் நீளம் 50 அடியைத் தாண்டுமெனின், விரிவுரையாளர் பின்பக்கத்திலுள்ளோருக்குத் தெரியும் வண்ணம் 1.5 அடி உயரம் கொண்ட மேடை வசதியை விரிவுரையாளருக்கு வழங்குதல் வேண்டும்.

8. விரிவுரைக் கட்டடத்தின் நீளம் 50 அடியைத் தாண்டுமெனின், தலைவர் திருப்தி கொள்ளும் வகையில் ஒலிபெருக்கி வசதிகள் அங்கு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. கட்டடத்துக்குள் போதிய அளவு தீயணைப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். தலைவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலர் பரிசோதனை செய்யும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அவை செயற்படும் நிலையிலும் இருத்தல் வேண்டும்.

10. உட்செல்வதற்கும், வெளிச் செல்வதற்குமெனக் கதவுகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலும், மாணவர் தொகை 100ஐத் தாண்டும்போது அவசர சந்தர்ப்பங்களில் அவர்கள் வெளியேறுவதற்கென மேலதிக வெளியேறும் கதவொன்றும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. விரிவுரைக் கட்டடத்தின் உட்புறச் சுவர்கள், தரைமட்டத்திலிருந்து 4 அடி உயரம் வரையில் வெள்ளை நிறப் பெயின்ட் பூசப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

12. வருடத்தில் ஆகக் குறைந்தது ஒரு தடவையேனும் தலைவர் குறித்துரைக்கும் சந்தர்ப்பங்களில் சுவர்களுக்கு பெயின்ட் பூசுதல் வேண்டும்.

13. இந்தத் துணைவிதிகளின் அட்டவணை 11இல் தரப்பட்டுள்ள மருந்துகளைக் கொண்டுள்ள தேவையான அளவு முதலுதவிக்கான வசதிகள் கட்டடத்துக்குள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

14. விரிவுரைக் கட்டட இருபக்கச் சுவர்களது பரப்பளவின் 1/4 பங்கிற்குக் குறைவில்லாத வண்ணம் காற்றோட்ட வசதியை ஏற்படுத்தும் காற்றோட்ட யன்னல்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

15. விரிவுரைக் கட்டடச் சுற்றாடலை எப்போதும் சுத்தமான நிலையில் பராமரித்து வருதல் வேண்டும். குப்பை கூளங்களை அகற்றுவதற்கெனத் தேவையான அளவில் கொள்கலன்களைக் கட்டடத்தின் வெளிப்புறத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

16. ஆண்கள், பெண்கள் என வெவ்வேறான மலகூடங்கள், சலகூடங்கள் வசதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். குறைந்தது 50 மாணவர்களுக்கு ஒரு மலகூடம் என்ற விகிதத்தில் உரிய வசதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். மலகூடங்களையும் சலகூடங்களையும் பொருத்தமான கிருமிநாசினிகளைக் கொண்டு துர்நாற்றம் இல்லாத வகையில் நிதமும் தொற்றுநீக்கம் செய்யப்பட்ட நிலையில் வைத்திருப்பதுடன், போதுமான அளவு நீர் வசதியும் செயற்படும் விதத்தில் வழங்கப்படுதல் வேண்டும்.

17. 50 மாணவர்களுக்கு ஒரு குடிநீர்க்குழாய் என்ற விகிதத்தில் போதுமான அளவு குடிநீர் வசதிகள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

18. மாணவர்களுக்கென 1 1/2 அடிக்குக் குறையாத உயரத்தையும், பின்புறத்தில் ஒரு அடிக்குக் குறையாத அகலத்தைக் கொண்ட சாய்வுப் பலகையையும் கொண்ட ஆசனங்கள் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு மாணவருக்கும் எனத் தனித்தனியான ஆசனங்கள் இல்லாத பட்சத்தில், ஒரு மாணவருக்கு 2 அடிக்குக் குறையாத அளவு நீளம் அவ்வாறான ஆசனங்களில் இருத்தல் வேண்டும்.

19. மாணவர்களுக்கென ஆகக் குறைந்தது 2 அடி நீளமும் 1.5 அடி அகலமும் கொண்ட ஒவ்வொரு மேசை வீதம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனி மேசைகள் இல்லாத பட்சத்தில், வழங்கப்படும் மேசையின் நீளம் குறைந்தது 2 அடியாக ஒருவருக்கு ஒதுக்கப்படுவதுடன், ஒரு மேசையின் உச்ச அளவு நீளம் 12 அடியைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

20. விரிவுரை மண்டபத்தில் ஆசனங்களையும், மேசைகளையும் அமைக்கும் போது இடைவெளி பற்றிய வசதிகள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

21. மாணவர்களுக்கென வழங்கப்பட்டுள்ள ஆசனங்களும் மேசைகளும் எப்போதும் பயன்படுத்தப் பொருத்தமான நிலையில் இருத்தல் வேண்டும்.

22. தலைவர் அல்லது அவரால் அனுமதி வழங்கப்பட்ட அலுவலர் நியாயமானது எனக் கருதும் எந்த நேரத்திலும் தனியார் கற்கை நிலையங்களுக்குள் பிரவேசித்துப் பரிசோதிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.

23. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும், தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும் முறையே நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயமான) 153 (2) ஆவது பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

24. 23 ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்படும் தண்டத் தொகை நகர சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

25. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற்பதங்களின் விளக்கம்:

"சபை" என்பது, கடுகண்ணாவ நகர சபையையும் ;

"தலைவர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரையும் ;

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும்,

"தனியார் கற்றல் நிலையங்கள்" என்பது, பணம் அறவிட்டுக்கொண்டு நடத்தப்படும் எந்தவொரு கற்றல் நிலையத்தையும் குறிக்கும்.

17. இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏதும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

## அட்டவணை - I

தனியார் கற்றல் நிலையமொன்றை நடத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் பெறும் விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பதாரியின் பெயர் :----.
2. முகவரி :----.
3. ஆளடையாள அட்டை இலக்கம் :----.
4. முன்வைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் :----

| | | | | |
|---|---|---|---|---|
| 1. கட்டட வரைபடம் : | உண்டு | ☐ | இல்லை | ☐ |
| 2. உள்ளக வடிவமைப்பு : | உண்டு | ☐ | இல்லை | ☐ |
| 3. தொழில்நுட்ப உபகரணங்கள் : | உண்டு | ☐ | இல்லை | ☐ |

விபரங்கள் :

5. கல்வி நிலையத்தின் பெயர் :----.
6. முகவரி :----.
7. பதிவிலக்கம் :----.

மேற்குறித்த விபரங்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பம் :........................................................................................ திகதி :.........................

**அலுவலகப் பாவனைக்கு :**

| | சரியானது | பிழையானது |
|---|---|---|
| விடய இலிகிதர் : கட்டட விண்ணப்பப்படிவம் | ☐ | ☐ |
| வருமானப் பரிசோதகர் : உள்ளக வடிவமைப்பு : | ☐ | ☐ |

அனுமதிப்பத்திரம் வழங்குவது பொருத்தமானது.

கையொப்பம் 1. :...............................................
2. :...............................................

அனுமதிப்பத்திரம் வழங்குவது பொருத்தமானது என பரிந்துரைக்கிறேன்/பரிந்துரைக்கவில்லை.

.................................................
செயலாளர்,
அங்கீகரிக்கிறேன்/அங்கீகரிக்கவில்லை.

.................................................
தலைவர்.


### அட்டவணை - II

| | | | |
|---|---|---|---|
| பரசிட்டமோல் | கோஸ் | பிளாஸ்டர் | ஓமத்திராவகம் |
| பஞ்சு | பெடடின் | தண்ணீர் | சித்தாலேப |
| சேர்ஜிகல் ஸ்பிரிட் | சவர அலகு | | |

### அட்டவணை - III

ஒரு பிள்ளைக்கான இடவசதிகள் பற்றிய அட்டவணை

| மேசையின் உயரம் | அகலம் | நீளம் |
|---|---|---|
| 1.5 அடிக்கு குறையாமல் | 1 அடி | 2 அடி |



**மத்திய மாகாண மாகாண சபை**

கடுகண்ணாவ நகர சபை

**துணைவிதிகள்**

*(255 ஆவது அத்தியாயம் ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் 10 (ஆ) உப பிரிவின் கீழ் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கடுகண்ணாவ நகர சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,*
*மத்திய மாகாணம்.*

*மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,*
*கண்டி,*
*2014, செத்தெம்பர் 15.*

விலங்குப் பண்ணைகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல் பற்றிய துணைவிதிகள்

1. இந்தத் துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபை நிர்வாக எல்லைக்குள் இறைச்சிக்காக, பாலுக்காக அல்லது முட்டைக்காக அல்லது விலங்கு இனப்பெருக்கத்துக்காக நடத்தப்பட்டுவரும் விலங்குப் பண்ணைகளையும் அவற்றின் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துதல், நிர்வகித்தல் மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டணம் அறவிடுதல் பற்றிய துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் நடத்தப்பட்டு வரும் விலங்குப் பண்ணைகள் அனைத்தையும் மக்களுக்கும், சுற்றாடலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத விதத்தில் சுகாதாரமான முறையில் நடத்திச் செல்வதும், பீடைகளில்லாமலும், வதை செய்யாமலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிர்ணயங்களுக்கு அமைய நடத்திச் செல்வதுமே இந்தத் துணைவிதிகள் விதிக்கப்படுவதன் நோக்குமாகும்.

3. தலைவரால் உரிய கருமத்துக்கென வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் மீது அல்லாது, எவரும் எந்தவொரு விலங்குப் பண்ணையையும் இறைச்சிக்காக, பாலுக்காக அல்லது முட்டைக்காக அல்லது விலங்கு இனப்பெருக்கத்துக்காக நடத்திச் செல்லக் கூடாது.

4. இரண்டாவது துணைவிதியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்டாலன்றி, அது எந்த வருடத்துக்கென வழங்கப்பட்டதோ, அந்த வருடத்தின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும்.

5. ஒவ்வொரு அனுமதிப்பத்திரமும் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயமான) 164, 165, 165அ, 165ஆ ஆம் பிரிவுகளின் கீழ் அறவீட்டுக்கு உட்படும். இந்தக் கட்டணத்தைச் சபை காலத்துக்குக் காலம் தீர்மானிக்கும், திருத்தப்பட்ட இந்தக் கட்டணங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் செயற்பாட்டுக்கு வரும்.

6. அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கும் எவரேனும் ஒருவர் நிர்வாக எல்லைக்குரிய மிருக வைத்தியரது விதப்புரையுடன் முன்வைத்தல் வேண்டும். இந்தத் துணைவிதியின் அட்டவணைக்கு அமைய விண்ணப்பப்படிவத்தை முன்வைத்தல் வேண்டும்.

7. ஒவ்வொரு விலங்குப் பண்ணை அனுமதிப்பத்திரத்திலும் ''அனுமதிப்பத்திரம் பெற்ற விலங்குப் பண்ணை'' என அனுமதிப்பத்திரதாரியின் பெயரைத் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தெளிவாகப் பெயின்ட் செய்துள்ள பெயர்ப்பலகையைத் தமது விலங்குப் பண்ணையின் வெளிப்பகுதியில் நன்கு தென்படும் வண்ணம் தொங்கவிடுதல் வேண்டும்.

8. விலங்குப்பண்ணை ஒவ்வொன்றின் அனுமதிப்பத்திரதாரி, தமது பண்ணையினதும் அதன் ஒவ்வொரு கட்டடத்தின் எல்லாச் சுவர்களிலும் தூண்களிலும் வண்ணப்பூச்சு பூச ஏற்பாடு செய்தல் வேண்டும்.

*9.* விலங்குப்பண்ணை ஒவ்வொன்றின் அனுமதிப்பத்திரதாரியும் தமது பண்ணையையும், அதன் அனைத்துக் கட்டடங்களையும் திருத்த வேலைக்கு உட்படுத்தி, சுத்தமாகவும், சுகாதாரமானதாகவும் வைத்து, நாளாந்தம் கழுவிக் கூட்டவும் செய்தல் வேண்டும்.

*10.* விலங்குப்பண்ணை ஒவ்வொன்றின் அனுமதிப்பத்திரதாரியும் தமது இடத்தைச் சுத்தமாகவும் சுகாதாரமானதாகவும் வைத்திருக்கவென விலங்குகளின் மலம், சலம் மற்றும் கழிவுப்பொருட்களை நாளாந்தம் மற்றும் அடிக்கடி குறுகிய கால எல்லைக்குள் ஒரு தடவையென சேகரிக்கச் செய்து, அவ்வாறு சேகரிக்கப்பட்ட விலங்குகளது மலம், சலம் மற்றும் கழிவுப்பொருட்களை ஏதும் நிலையான பொருட்களால் தயாரிக்கப்பட்ட மூடியுடனான கொள்கலனில் அல்லது சிமெந்துப் பூச்சினால் மெழுகப்பட்ட, இடவசதியுள்ள குழியினுள் இடுதல் வேண்டும்.

*11.* விலங்குப்பண்ணை ஒவ்வொன்றின் அனுமதிப்பத்திரதாரியும் அனைத்துக் கழிவுப் பொருட்களையும், மலம், சலம் என்பவற்றைக் கழுவிய நீரையும் நாளாந்தம் குறைந்தது ஒரு தடவையேனும் அகற்றச் செய்து, அதன் மூலம் பீடைகள் ஏற்படாத வண்ணம் வெளியேற்ற ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

*12.* விலங்குப்பண்ணை ஒன்வொன்றின் அனுமதிப்பத்திரதாரியும் குறைந்தது 3 மாதத்துக்கு ஒரு தடவையேனும் தமது பண்ணையின் ஒவ்வொரு விலங்கையும் அரசாங்க மிருக வைத்தியரது பரிசோதனைக்கு உட்படுத்திப் பெறப்பட்ட அறிக்கையைத் தமமிடம் வைத்திருத்தல் வேண்டும். மிருக வைத்தியர் ஏதும் விதப்புரையைச் செய்திருந்தால், உடனடியாக அதனை நிறைவேற்றுதல் வேண்டும்.

*13.* விலங்குப் பண்ணையில் உள்ள விலங்குக்கோ அல்லது விலங்குகளுக்கோ ஏதும் நோய்கள் அல்லது தொற்று நோய்கள், நோய் பரவும் தன்மை ஏற்படுமெனின், பண்ணைக்குள் அந்த விலங்குகளை வேறாக்கி வைக்கக்கூடிய வகையில் பண்ணைகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*14.* மேற்குறித்த 13 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நிலை பண்ணைக்குள் ஏற்படுமிடத்து, அதுபற்றி மிருக வைத்தியருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

*15.* விலங்குப் பண்ணைக்குள் விலங்குகளை வைத்திருக்கும் சந்தர்ப்பங்களில், எந்தவொரு விலங்கை அறுப்பதும், அதற்கு வதைகள் செய்வதும் கூடாது.

*16.* விலங்குப் பண்ணைக்குள் ஏதும் நோயினால், தொற்று நோயினால் அல்லது நோய் பரவும் தன்மையினால் இறந்துபோகும் விலங்குகளது இறைச்சியை மனித நுகர்வுக்குப் பயன்படாத விதத்தில் அழித்து விடுதல் வேண்டும்.

*17.* தலைவர் அல்லது எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்ட எவரேனும் அலுவலரால் விலங்குப்பண்ணை ஒன்றினுள் நியாயமான எந்த வேளையிலும் உட்புகுந்து அதனைப் பரிசோதிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.

*18.* தலைவர் அல்லது எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்ட எவரேனும் அலுவலருக்குப் பண்ணைக்குள் புகுந்து பரிசோதனை செய்வதற்கு அனுமதிப்பத்திரதாரி அல்லது விலங்குப்பண்ணைப் பொறுப்பாளர் இடமளித்தல் வேண்டும். தலைவருக்கோ அல்லது அவ்வாறான அலுவலருக்கோ தேவைப்படும் அனைத்து உதவிகளையும் வழங்குதல் வேண்டும்.

*19.* இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 (2) ஆவது பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

*20.* 19 ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்படும் தண்டத் தொகை நகர சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

*21.* பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற்பதங்களின் விளக்கம்:

"சபை" என்பது, கடுகண்ணாவ நகர சபையையும் ;

"தலைவர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரையும் ;

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு

அலுவலரையும்,

“விலங்குகள்” என்பது, இறைச்சிக்காகவோ, பாலுக்காகவோ அல்லது முட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவோ அல்லது இனப்பெருக்கத்துக்காகவோ வளர்க்கப்படும் விலங்குத் தொகுதியையும் குறிக்கும்.

22. இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏதும் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

முதலாவது அட்டவணை - (துணைவிதி இல. 06)

**விலங்குப் பண்ணை அனுமதிப்பத்திரத்துக்கான விண்ணப்பப்படிம்**

1. விண்ணப்பதாரியின் பெயர் :----.
2. முகவரி :----.
3. தொலைபேசி இலக்கம் :----.
4. விலங்குப் பண்ணையின் முகவரி :----.
5. மாவட்டம் :----.
6. பிரதேச செயலாளர் பிரிவு :----.
7. கிராம அலுவலர் பிரிவு/கிராமம் :----.
8. வளர்க்கப்படும் விலங்கு வகைகளும் அவற்றின் எண்ணிக்கையும் :----.

| இல. | வகை | விலங்குகளின் எண்ணிக்கை | வளர்ப்பின் நோக்கம் இறைச்சிக்காக/ஏனைய | விலங்குகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் |
|---|---|---|---|---|
| 1. | மாடு | | | |
| 2. | ஆடு | | | |
| 3. | பன்றி | | | |
| 4. | கோழி | | | |

9. பண்ணைக்கு வரும் வழி பற்றிய விபரம் :...............................................

திகதி :............................. ................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

10. சபையின் சுற்றாடல் அலுவலரது அறிக்கை

11. பிரதேச மிருக வைத்தியரது அறிக்கை

12. அலுவலகப் பாவனை

மேற்குறித்த தகவல்கள், அறிக்கைகள் என்பவற்றின் அடிப்படையில் விலங்கு வளர்ப்புப் பிரிவை நடத்திச் செல்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதைப் பரிந்துரை செய்கின்றேன்/செய்யவில்லை.

திகதி :........................... ...................................
செயலாளர்.

விலங்குப் பண்ணை நடத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதை அங்கீகரிக்கின்றேன்/ அங்கீகரிக்கவில்லை.

திகதி :.............................. ................................................
தலைவர்.

07- 279/13

**மத்திய மாகாண மாகாண சபை**

கடுகண்ணாவ நகர சபை

**துணைவிதிகள்**

*(255 ஆவது அத்தியாயம் ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவின் 9 (ப) உப பிரிவின் கீழ் நகர சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கடுகண்ணாவ நகர சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 154 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்,*
*மத்திய மாகாணம்.*

*மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,*
*கண்டி,*
*2014, செத்தெம்பர் 15.*

நகர சபை நிர்வாக எல்லைக்குள் பொதுக் குளியல் இடங்களைக் கட்டுப்படுத்தும் மற்றும் முறைப்படுத்தும் துணைவிதிகள்

*1. இந்தத் துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் பொதுக் குளியல் இடங்களைக் கட்டுப்படுத்தும் மற்றும் முறைப்படுத்தும் துணைவிதிகள் என அழைக்கப்படும்.*

*2. இந்தத் துணைவிதிகள் கடுகண்ணாவ நகர சபையின் நிர்வாக எல்லைக்குள் பொதுக் குளியல் இடங்களைக் கட்டுப்படுத்துவதற்கென விதிக்கப்படுகின்றன.*

*3. பொதுக் குளியல் கிணறுகளைப் பயன்படுத்தும் கிராம மக்களது பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுவினால் ஒவ்வொரு குளியல் கிணறும் முறையாக நடத்திச் செல்லப்படுதல் வேண்டும்.*

*4. குறித்த குழு கடுகண்ணாவ நகர சபையின் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். குழு தீர்மானிக்கும் சிறிய தொகையொன்றை உறுப்புரிமைக் கட்டணமாக அறவிட்டு அதனைச் சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்தல் வேண்டும். சபை தீரமானிக்கும் தொகையொன்றை குறித்த கணக்கிற்கு வழங்குவது சட்டபூர்வமானதாக அமையும். அத்தொகை கிணற்றின் பயன்பாட்டுக்கென மீள எடுக்கப்படுவது சட்டபூர்வமானதாக இருத்தல் வேண்டும். பணத்தை மீளப் பெறுதலைக் குழுவின் விருப்புக்கேற்றவாறு குழுவின் தலைவர் மற்றும் செயலாளர் மேற்கொள்ளல் வேண்டுமென்பதுடன், பணத்தைச் செலவிடுவது பற்றியதும், கட்டணம் அறவிடுவது பற்றியதுமான அறிவிப்புகளை 6 மாதங்களுக்கு ஒரு தடவை சபைக்கு அறிவிப்பது குழுவின் கடமையாக அமைதல் வேண்டும்.*

*5. மூன்றாவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள குழு, கிணற்றை முறைப்படி நடத்திச் செல்வதற்கெனப் பின்வரும் கருமங்களைச் செய்தல் வேண்டும்.*

(I) *குளியல் கிணற்றுக்கென வாளியையும், கயிற்றையும் தேவைக்கேற்றவாறு ஏற்பாடு செய்தல் ;*

(II) *குறித்த வாளியை 6 மாதங்களுக்கு ஒரு தடவை பெயின்ட் பூசி சுத்தப்படுத்துதல் ;*

(III) *கிணற்றில் அசுத்தமாக்கப்பட்ட நீரை 6 மாதங்களுக்கு ஒரு தடவை இறைத்து சுத்தப்படுத்துதல் ;*

(IV) *கிணற்றின் நீர்மூலாதாரத்தை அல்லது கிணற்றின் சூழலில் காணப்படும் மரஞ், செடி கொடிகளைப் பாதுகாத்தல்.*

*6. மக்கள் நீராடப் பயன்படுத்தும் நீர் அவர்களுக்கென எப்போதும் திறந்து விடப்பட்டிருப்பதுடன், ஒவ்வொரு கிணறும் 0.6096 மீற்றருக்குக் குறையாத உயரத்தைக் கொண்ட பாதுகாப்புச் சுவரைக் கொண்டிருத்தலும் வேண்டும். குறித்த சுவர் வெளியில் தரை மட்டத்திலிருந்து கீழாக 0.6096 மீற்றர் ஆழத்துக்குச் சிமெந்து இடப்பட்டும் இருத்தல் வேண்டும்.*

*7. ஒவ்வொரு பொதுக் கிணற்றையும் சூழவுள்ள தரைப்பகுதி நீரை உறிஞ்செடுக்காதவாறு வடிந்தோடக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ள வடிகான் ஊடாகச் செல்வதற்கேற்ற வண்ணம் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*8. ஆண், பெண் இருபாலாருள் ஒரு பிரிவினர் பயன்படுத்துவதற்கெனப் பிரதேச சபை குளியல் இடங்களில் ஒதுக்கியுள்ள பொதுக் கிணறுகளில் அல்லது ஆடைகள் மாற்றுவதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் அடுத்த பிரிவினர் எவரும் குளித்தல், கழுவுதல் அல்லது அவ்வாறான இடங்களின் நீரை ஏதும் வழிகளில் பயன்படுத்துதல் கூடாது.*

*9. தொற்றுநோய் ஒன்றினால் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அண்மையில் அவ்வாறான நோயினால் பீடிக்கப்பட்டு அண்மையில் குணமாகிய எவரும் இவ்வாறான பொதுக் கிணற்றில் அல்லது பொதுக் குளியல் இடமெனப் நகர சபை ஒதுக்கியுள்ள ஏதும் இடத்தில் குளித்தல், கழுவுதல் அல்லது அங்குள்ள நீரை எவ்வகையிலேனும் பயன்படுத்துதல் கூடாது.*

*10.பொதுக் குளியல் இடமென ஒதுக்கப்பட்டுள்ள ஏதும் இடத்திலிருந்து குடிப்பதற்கென நீரைப் பெறுதல் கூடாது.*

*11. பொதுக் குளியல் இடமென வேறாக்கப்பட்டுள்ள ஏதும் ஒரு இடத்தில் அல்லது அதன் அருகில் மாடு, ஆடு, பன்றி, மட்டக்குதிரை, கோவேறு கழுதை அல்லது நாய் போன்ற விலங்குகளைக் கழுவுவதற்கோ அல்லது வேறேதும் கருமங்களுக்கோ அல்லது அவ்வாறான இடங்களுக்குள் நுழையச் செய்வதோ அல்லது விரட்டி விடுவதோ கூடாது.*

*12. இவ்வாறான பொதுக் கிணறு அல்லது அதன் அருகில் அல்லது குளியல் இடமெனப் நகர சபை ஒதுக்கியுள்ள இடங்களில் எவரேனும் மலம் கழிப்பதோ அல்லது சிறுநீர் கழிப்பதோ கூடாது.*

*13. பொதுக் கிணறு குளியல் இடமென நகர சபை ஒதுக்கியுள்ள ஏதும் இடமொன்றில் வாகனங்களைக் கழுவுவதோ அல்லது அவ்வாறான கருமங்களுக்கு அந்த நீரைப் பயன்படுத்துவதோ கூடாது.*

*14. பொதுக் கிணறு அல்லது குளியல் இடமென நகர சபை ஒதுக்கியுள்ள ஏதும் இடமொன்றில் விவசாய இரசாயனங்களை விசிறப் பயன்படுத்திய உபகரணங்களைக் கழுவுதல் அல்லது விவசாய இரசாயனங்களை நீரில் கரைத்தல் அல்லது அவற்றைக் கரைப்பதற்காக நீரைப் பயன்படுத்துதல் கூடாது.*

*15. இவ்வாறான பொதுக் கிணற்றின் சுற்றாடலில் அல்லது கிணறு அமைந்துள்ள இடத்தில் பண்பாடற்ற வகையில் நடந்துகொள்ளுதல் கூடாது.*

*16. பொதுக் கிணற்றில் குளிக்கும் போது கிணற்றுக்குள் இறங்கிக் குளித்தல் கூடாது. மற்றும் எவ்வகையிலேனும் நீரை அசுத்தமடையச் செய்வித்தல் கூடாது.*

*17. பொதுக்கிணறு அல்லது குளியல் இடமென நகர சபை ஒதுக்கியுள்ள ஏதும் இடமொன்றில் கருமங்கள் முறையாக நடைபெறுகின்றனவா என்பதைப் பிரசோதனை செய்வதற்காகத் தலைவர் அல்லது அதற்கென அவரால் பொதுவாக அல்லது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட பிரதேச சபையின் அலுவலர் எவரும் பரிசோதிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.*

*18. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 (2) ஆவது பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் உட்படுத்தல் வேண்டும்.*

*19. 18 ஆம் துணைவிதியின் கீழ் விதிக்கப்படும் தண்டத் தொகை நகர சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.*

*20. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற்பதங்களின் விளக்கம்:*

*"சபை" என்பது, கடுகண்ணாவ நகர சபையையும் ;*

*"தலைவர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரையும் ;*

*"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, கடுகண்ணாவ நகர சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும்,*

*குறிப்பிடும்.*

*21. இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏற்படும் ஏதும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.*

*7- 279/14*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.